விலை ரூபா 8.00

# உதயன்

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 13 புதன்கிழமை (26-05-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:183

# புலிகளின் பிரதேசத்திலும் இந்தியா அபிவிருத்திப் பணிகளைச் செய்யும்!

## ஆனால் பொது நிறுவனங்கள் ஊடாக என தூதுவர் நிருபம் சென் நேற்று அறிவிப்பு

கொழும்பு,மே26

**இலங்கையில் அரச கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் (புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும்) புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்திப் பணிகளைச் செய்யவும், அவற்றுக்கு உதவவும் இந்தியா தயாராக இருக்கிறது.**

**இதற்காக அப்பகுதிகளுக்கு இந்தியா நேரடியாகத் தனது பிரதிநிதிகளை அனுப்பவேண்டும் என்றில்லை. நன்றாக நிறுவனமயப்படுத்தப்பட்ட பொதுஸ்தாபனங்கள் மூலம் அப்பணியை மேற்கொள்ளலாம். விரைவில் அத்தகைய திட்டங்களை முன்னெடுக்க இந்தியா விரும்புகின்றது.**

**- கொழும்புக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென் இவ்வாறு நேற்று அறிவித்தார்.**

கொழும்பு இந்திய கலாசார மத்திய நிலையத்தில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றில் யாழ்ப்பாணம், நல்லூர் பாரம்பரிய நுண்கலைகள் அபிவிருத்தி அமைப்பினருக்கு கர்நாடக இசைக் கருவிகளான மிருதங்கம், தபேலா, ஆர்மோனியம், வீணை போன்றவற்றை இந்திய - இலங்கை நட்புறவுச் சங்கத்தின் இணைத்தலைவரும், இலங்கைக்கான இந்தியத் தூதுவருமான நிருபம் சென் வழங்கினார்.

இந்த வைபவத்தில் உரையாற்றிய போதும், பின்னர் செய்தியாளர்களுடன் உரையாடிய சமயமும் மேற்படி தகவலை அவர் வெளியிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இலங்கையுடனும் இங்குள்ள மக்களுடனும் படிப்படியாக உறவுகளை வளர்த்துக் கொண்டு ஒரு சிறந்த நண்பனாக இருப்பதையே இந்தியா விரும்புகிறது.

கலை, கலாசாரங்களுடன் மிகவும் அன்னியோன்ய தொடர்புகளைக் கொண்டவையாகவே நமது இரு நாடுகளும் திகழ்கின்றன.

இலங்கை மக்கள் ஜனநாயக ரீதியிலும், மனிதவுரிமைகளுக்கு அமையவும் தமது செயற்பாடுகளையும், கருத்துக்களையும் வெளியிடவேண்டும். அதில் எந்தவிதமான தவறும் கிடையாது. அதற்கு அவர்களுக்குப் பூரண உரிமையுண்டு. அதேசமயம் தமிழ் ஊடகங்கள் இங்கு நடுநிலைமை இல்

(14ஆம் பக்கம் பார்க்க)



குடாநாட்டின் கல்விநிலை குறித்து ஆராய்வதற்காக நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த ஜேர்மன் நாட்டு நிபுணர்களான செல்வி அஸ்ரிக் பெக்கர், ஜனாப் மொஹமட் ஆகிய இருவரும் நல்லூர் கந்த சுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபட்டனர். அந்தச்சமயம் எடுக்கப்பட்ட படம்.

*(படம்:அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## சொல்ஹெய்ம் இன்று வன்னிக்கு!



கொழும்பு,மே26

சமாதான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கச் செய்யும் முயற்சியாக கொழும்புக்கு வந்துள்ள நோர்வேயின் விசேட அனுசரணைக்குழுவின் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் இன்று காலை கிளிநொச்சிக்குச் செல்கிறார். அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை அவர் சந்தித்துப் பேசுவார்.

எரிக் சொல்ஹெய்ம் நேற்றுப் பிற்பகல் கண்டியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து கலந்தாலோசனை நடத்துவார் என எதிர்பார்க்கப்பட்டது. அச்சந்திப்பின்போது எட்டப்படும் சில முடிவுகளை இன்று புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கும் போது அவர் தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றைய சந்திப்பின் பின்னர் பிற்பகலில் கொழும்பு திரும்பும் சொல்ஹெய்ம், மீண்டும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்திப்பார் என்றும் கூறப்பட்டது.

கிளிநொச்சியில் புலிகளுடன் ஆராய்ந்த விடயங்கள் குறித்தும் ஜனாதிபதியோடு அவர் கலந்தாலோசனை நடத்துவார். அதன் பின்னரே சமாதானப் பேச்சுக்கான இணக்கம் குறித்து முடிவு ஏதும் வெளியாக வாய்ப்புண்டு என விடயமறிந்த வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. (க)

### எதிர்ப்பு நிகழ்வுக்கு ஏற்பாடாகியிருந்ததால்

## யாழ்.செயலகம் செல்வதை தவிர்த்தார் சேகு இஸ்ஸதீன்!

யாழ்ப்பாணம்,மே26

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த ஊடகத்துறை பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீன், யாழ்.செயலகத்துக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொண்டார்.

தமிழ் இளைஞர் குழுவொன்று அங்கு வைத்து அமைச்சருக்கு கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்புத்தெரிவிக்கவும், மறியல் போராட்டத்தில் ஈடுபடவும் தயாராக நிற்கின்றது என்று கிடைத்த தகவலை அடுத்தே அமைச்சர் யாழ். செயலகத்துக்கான தமது விஜயத்தைத் தவிர்த்துக்கொண்டார்.

நேற்றுக்காலை விசேட விமானத்தில் யாழ்.வந்த அவர் இங்கு பலாலியில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் அலுவலகங்களுக்கும் யாழ்நகரில் தொலைத்தொடர்புத் திணைக்களக்கட்டடத்தில் அமைந்துள்ள தென்றல் அலுவலகத்துக்கும் நேரில் சென்றார். அவற்றின் நடவடிக்கைகளில் பங்குகொண்டார்.

யாழ்.நல்லை ஆதீனம், யாழ். ஆயர் இல்லம் ஆகியவற்றுக்குச் சென்ற அவர் நல்லூர் கோவிலிலும் தரிசனம் செய்தார்.

யாழ்.செயலகத்துக்கும் அவர் செல்வதாக திட்டமிட்டிருந்தது. அவரது வரவை எதிர்த்து இளைஞர்கள் செயலக வாயிலில் பல டசின் கணக்கில் திரண்டிருந்தனர். கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன. திரண்டிருந்த இளைஞர்கள் தங்கள் கைகளில் கறுப்புக்கொடிகளையும், அமைச்சருக்கு எதிரான சுலோகங்

(14ஆம் பக்கம் பார்க்க)

### உலக வங்கியின் உதவியுடனான

## வீடமைப்புத் திட்டம் குறித்து நேற்றுத் திருமலையில் மாநாடு

வடக்கு-கிழக்கில் 95 ஆயிரம் வீடுகளை அமைக்கும் உலக வங்கியின் திட்டத்தின் கீழ் வீடொன்றை அமைப்பதற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்குவதென்று முடிவுசெய்யப்பட்டுள்ளது. திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற உயர் மட்ட மாநாட்டில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஜனாதிபதியின் பேச்சாளரும் புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம்பீரிஸ் கலந்துகொண்ட மேற்படி மாநாட்டிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. வடக்கு - கிழக்கில் பணியாற்றும் அரச அதிபர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்றிருந்தனர்.

வடக்கு - கிழக்கில் 95 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்துக்கு உலக வங்கி சுமார் 748 கோடி

(14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா கல்வியியற் கல்லூரியில் மாணவர்களிடையே மோதல்!

வவுனியா,மே26

வவுனியா பூந்தோட்டம் கல்வியியற் கல்லூரியில் மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் நான்கு மாணவர்கள் காயம் அடைந்து வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இரவு உணவுப் பிரச்சினை காரணமாக ஏற்பட்ட மோதலில் ஆசிரிய மாணவர்கள் காயம் அடைந்துள்ளனர். காயம் அடைந்த மாணவர்கள் அனைவரும் சிங்கள மாணவர்கள் என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாகவும் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பாகவும் கல்வியியற் கல்லூரி நிர்வாகம் விசாரணை நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கல்வியியற் கல்லூரியில் பயின்று வந்த 154 சிங்கள மாண

(14ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதல் பட்டதாரிகளுக்கு பணிநியமனங்கள்

### பிரதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,மே26

வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் நியமனங்களை வழங்க அரசு தீர்மானித்துள்ளது. வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் கடந்த இருபதாம் திகதியுடன் முடிவடைந்துவிட்டது. தற்போது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

இதனைத்தொடர்ந்து அவ்விண்ணப்பங்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் அனுசரணையோடு தரம் பிரிக்

(14ஆம் பக்கம் பார்க்க)



# பேராசிரியர் தம்பையா படுகொலை: புலிகள் இயக்கம் கடும் கண்டனம்!

கொழும்பு,மே26

கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் தம்பையாவின் படுகொலையைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெற்ற இப்படுகொலைக்கு சூத்திரதாரிகள் யார் என்பதைக் கண்டு பிடிக்கவேண்டும். யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு இப்படுகொலை தொடர்பாக பாரபட்சமற்ற நீதி விசாரணை நடத்தவேண்டும் எனவும் புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பேராசிரியர் தம்பையாவின் படுகொலை தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை வெளியிட்டுள்ள அனுதாப அறிக்கையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பேராசிரியரின் படுகொலை மட்டக்களப்பில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்விகலாசார அபிவிருத்திகாகப் பெரும் பங்காற்றியவர் அவர். அவருடைய மரணம் மட்டு.வாழ்மக்களுக்குப் பேரிழப்பாகும் என அந்த அனுதாப அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பேராசிரியர் தம்பையாவின் பூதவுடல் மட்டக்களப்பில் இருந்து வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு நேற்று நண்பகல் கொண்டு வரப்பட்டது.

நகரின் பல பாகங்களிலும் வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

பல்கலைக்கழக பிரதான மண்டபத்தில் பேராசிரியரின் பூதவுடல் இரண்டு மணிநேரம் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருநதது.

அதன்பின் பேராசிரியர் தம்பையாவின் பூதவுடல் அவரது சொந்த ஊரான வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டது.

இறுதிக்கிரியைகள் இன்று மாலை நான்கு மணிக்கு வவுனியாவில் இடம் பெறும்.

இப்படுகொலை தொடர்பாக மட்டக்களப்புப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவம் நடந்த இடத்துக்கு நேற்று மாலை மோப்ப நாய்கள் கொண்டு வரப்பட்டபோதும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (க)

# மடத்தடி விபத்து வழக்கில் சாட்சிக்கு அச்சுறுத்தல்

யாழ்.மடத்தடிச் சந்தியில் கடந்த வருடம் ஒக்ரோபர் 3 ஆம் திகதி இடம்பெற்ற இராணுவ டிரக்-மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் உயிரிழந்தனர். இது தொடர்பான வழக்கில் முதலாவது சாட்சியை இராணுவத்தினர் அச்சுறுத்தியுள்ளனர் என நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

மடத்தடிச் சந்தியில் இடம்பெற்ற இந்த விபத்துத் தொடர்பாக டிரக்கின் சாரதியான சிப்பாய் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு மேலதிக நீதிவான திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

படையினரின் விசாரணை அதிகாரியான சப்.இன்ஸ்பெக்டர் சேனரத்தின சாட்சியம் அளித்தார்.

இந்த வழக்கின் முதலாவது சாட்சியான ஜோர்ச் என்பவரை இராணுவத்தினர் அச்சுறுத்தியுள்ளனர் என நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த இராணுவ ஆலோசகர் கப்டன் குறாப்புக்கு இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

"சிவில் நிர்வாக விடயத்தில் படையினர் தலையிடக்கூடாது. வழக்கு விசாரணைகளுக்கு இடையூறு செய்யக்கூடாது. இது விடயமாக விசாரணை செய்து, அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் குறாப்பிடம் தெரிவித்தது.

"படையினர் அப்படிச் செய்யமாட்டார்கள். இது குறித்து ஏற்கனவே நீதிமன்றத்துக்கு அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையில் செயற்பட படையினருக்கு அறிவுறுத்துகிறோம்" என்று குறாப்பு பதில் அளித்தார்.

மேல் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (ஒ-3)

பல தடவைகள் ஒத்திவைக்கப்பட்டு வந்த

# கிழக்குப் பல்கலை. பட்டமளிப்பு ஜூன் 5 ஆம் திகதி நடக்கிறது!

கொழும்பு,மே26

கிழக்குப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா ஜூன் ஐந்தாம் திகதி நடைபெறும். கடந்த 2003 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த இப்பட்டமளிப்பு விழா பல்வேறு காரணங்களுக்காகப் பல தடவைகள் பிற்போடப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், பட்டமளிப்புவிழாவை இம்முறை மட்டக்களப்பு விபுலானந்தர் இசை நடனக்கல்லூரியில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளைக் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் ரவீந்திரநாத் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

உபவேந்தர் ரவீந்திரநாத் தலைமையில் நடைபெறும் இப்பட்டமளிப்பு விழாவில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி மெண்டிஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

இம்முறை சகல துறைகளையும் சார்ந்த 314 பட்டதாரிகள் பட்டம் பெறுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

# இந்திய மீனவரிடம் பறிமுதல் செய்த றோலர்களை ஏலத்தில் விற்கக் குழு

யாழ்ப்பாணம்,மே26

இந்திய மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட றோலர்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்களிடம் இருந்து 54 றோலர் படகுகள் கைப்பற்றப்பட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

பின்னர் யாழ்.மேல் நீதிமன்றத்தினால் இந்த 54 படகுகளும் அரசுடைமையாக்கப்பட்டு யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது இந்தப் படகுகள் ஊர்காவற்றுறை மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இப் படகுகளை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் தலைமையகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஏலத்தில் விற்பனை செய்வதற்கான குழுவில் யாழ்மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் மற்றும் கொழும்பு தலைமையகத்தைச் சேர்ந்த இருவர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப் படகுகளை மூன்று மாதங்களுக்குள் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் இவர்களைக் கேட்டுள்ளார். (ஐ-7)

## கடத்தப்பட்டவர் சடலமாக மீட்பு!

பேருவளை,மே26

அளுத்கமை நகரில் கடந்த 22 ஆம் திகதி ஓட்டோ ஒன்றில் கடத்தப்பட்டவர் எனக் கருதப்படும் வர்த்தகர் ஒருவரின் சடலத்தை அளுத்கம பொலீஸார் நேற்றுமுன்தினம் களுவாமோதர ஆற்றில் கரையொதுங்கிய நிலையில் மீட்டுள்ளனர்.

அளுத்கமைப் பகுதியைச் சேர்ந்த வெடிகார ஒபயசேன சில்வா (வயது-50) எனும் ஐந்து பிள்ளைகளின் தந்தையின் சடலத்தையே பொலீஸார் மீட்டுள்ளனர்.

கடத்தப்பட்ட இவர் பின்னர் அடித்துக கொலை செய்யப்பட்டு சடலமாக களுவாமோதர ஆற்றில் வீசப்பட்டிருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர். அளுத்கமை பொலீஸார் இக கொலைச் சம்பவம் தொடர்பாக இரு சந்தேக நபர்களை கைது செய்துளளனர். மேலதிக புலன் விசாரணை தொடர்கிறது. (க)

# முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்துகின்றார் பேரியல்

கொழும்பு,மே26

புலிகளுடனான எதிர்காலப் பேச்சுக்களில் முஸ்லிம் சமூகத்தின் சார்பில் பிரதிநிதிகள் பங்குபற்ற வேண்டும் என 'நுஆ' தலைவியும் அமைச்சருமான பேரியல் அஷ்ரப் வலியுறுத்துகிறார் என இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

ஒரெயொரு முஸ்லிம் கட்சியைச் சேர்ந்தவர்களை மட்டும் பேச்சுக்களில ஈடுபடுத்துவதன் மூலம் பரந்த ஒரு தீர்வை எட்டிவிடமுடியாது என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

முன்னைய அமைதிப் பேச்சுக்களை நினைவுபடுத்திய அவர், அவ்வாறு ஒரு கட்சிப் பிரதிநிதித்துவம் செய்வது கொள்கைகளை வகுப்பதற்கான மட்டுப்படுத்தலாக அமையும் என்றும் கூறினார்.

எதிர்காலப் பேச்சுக்களில் முஸ்லிமகளின் பிரச்சினைகள் விரிவாக அலசப்படுவதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரும்புகிறார் எனத் தேசிய ஐக்கிய முன்னணியின் (நுஆவின்) தலைவி நம்புகிறார் எனவும் அந்த இணையத்தளச் செய்தி தெரிவித்தது.

## நோர்வே குழு சந்திப்பு

கிளிநொச்சி,மே26

தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.விஜியை நோர்வேத் தூதுக் குழுவினர் நேற்றுக் காலை 11 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள தமிழர்புனர்வாழ்வுக் கழக அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

தமிழர் தாயக அபிவிருத்திச் செயற்பாடுகள், சமாதானச் செயற்பாட்டில் நோர்வேயின் பங்களிப்பு சுகாதார மேம்பாடு போன்ற விடயங்கள் குறித்து இச்சந்திப்பில் ஆராயப்பட்டன. (ஒ-9-4)

# பொலீஸாரால் தேடப்பட்டவர் நீதிமன்றில் சரணடைந்தார்

குடாநாட்டில் இடம்பெற்ற பல சட்டவிரோதச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தில் தேடப்பட்ட நபர் ஒருவர் யாழ்.மேலதிக நீதிவான் முன் நேற்றுமுன்தினம் சரண் அடைந்தார்.

யாழ்.ஐந்துசந்தியைச் சேர்ந்த ஜெயராசா சுரேஷ் என்பவரே கிராம சேவையாளர் மூலம் நீதிமன்றில் சரண் அடைந்தவராவார்.

இவரை அடுத்தமாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி மேலதிக நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் உத்தரவிட்டார்.

பிரஸ்தாப நபருக்கு எதிராகப் பல நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

யாழ்.பல்கலைக்கழகத்தில்

# இறால் வளர்ப்புத் தொடர்பான செயலமர்வு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே26

பண்ணையில் இறால் வளர்ப்புச் சம்பந்தமான இருநாள் செயலமர்வு, சிலாபம் அக்குவா சேவிஸ் நிறுவனம் மற்றும் போரூட் நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக கடல் வள அபிவிருத்தி நிலையத்தினால், யாழ் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இன்று காலை 8.30 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

இன்றும் நாளையும் நடைபெறவுள்ள இச் செயலமர்வின் இன்றைய முதலாம் நாள் நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் ஆர். குமாரவடிவேல் தலைமையில் நடைபெறும்.

இந்த அமர்வில் யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் கே. சித்திரவடிவேல், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனத்தின் பணிப்பாளா ப.அருள், போரூட் நிறுவனத்தின் யாழ். மாவட்ட நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் அண்டேஸ் ஸ்ரென்ஷக், சிலாபம் அக்குவா சேவிஸ் நிறுவனத்தின் தலைவர் ஆனந்த மளவடு ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

மாலை அமர்வில் அக்குவா சேவிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.தயாபரன், இந்தியாவைச்சேர்ந்த இறால் குஞ்சு உற்பத்தி தொழில்நுட்ப நிபுணர் டினேஸ்சிகாமணி ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகள் வழங்குவார்கள்.

நாளைய இரண்டாம் நாள் அமர்வின்போது குடாநாட்டில் இறால் வளர்ப்பினை மேற்கொள்வதற்கான இடங்கள் பார்வையிடப்பட்டு பொருத்தமான இடங்கள் தெரிவுசெய்யப்பட உள்ளது. (10-ரி)

# படைமுகாம் பகுதிக்குள் நடமாடிய நபர் கைது!

யாழ்ப்பாணம்,மே26

யாழ்நகரப்பகுதியில் அமைந்துள்ள 51 ஆவது படையணி முகாமுக்குள் நேற்று நுழைந்த நபர் ஒருவரைப் பொலீஸார் கைது செய்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை சுமார் 1.30 மணியளவில் யாழ். நகரப்பகுதியில் - பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள 51 ஆவது படையணி முகாமுக்குள் நுழைந்து அப்பகுதியில் நடமாடிய நபரை இராணுவத்தினர் கைது செய்து உடனடியாக யாழ்.பொலீஸாரிடம் ஒப்படைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பொலீஸ் நிலையக் குற்றவியல் பொலீஸார் இந்த நபரை விசாரணைக்குட்படுத்தினர். இரும்பு மற்றும் அலுமினியக்கழிவுகளைச் சேகரிப்பதற்காகவே படைமுகாம் பகுதிக்குள் தான் நுழைந்தார் என்று அந்த நபர் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார். (ஒ-7)

# கற்பிட்டியில் அத்துமீறி நடந்த 4 பொலீஸார் இடைநிறுத்தம்!

## அதனால் பதற்றநிலை தணிந்தது

கற்பிட்டி,மே26

கற்பிட்டியில் முஸ்லிம் மேசன் தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் எனக் கருதப்படும் பொலீஸாருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு பொலீஸார் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டனர்.

இதனால், பொலீஸாருக்கு எதிராக கற்பிட்டியில் தாம் முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கையை பொதுமக்கள் கைவிட்டனர். இப்போது பதற்றம் நீங்கி நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கட்டுமானப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மேசன்மாரைத் தாக்கிய பொலீஸார் அங்கு மோட்டார் சைக்கிள்களையும், சைக்கிள்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

பொலீஸாரின் இச்செயலைக் கண்டித்து கற்பிட்டியில் வாழும் மூவின மக்களும் பொலீஸாருக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகளை வெளிப்படுத்தினர்.

வடமேல் மாகாணசபை உறுப்பினர்களும், பிரதேச சபை உறுப்பினர்களும் மற்றும் கட்டடப் பணியாளர்கள் சங்கம், ஓட்டோ சாரதிகள், வான் உரிமையாளர்கள் சங்கம், மீனவர் சங்கம் என்பன இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு வழங்கின.

சிலாபம் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரின் பணிப்புரையின் பேரில் புத்தளம் பிரதேச உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் வெயங்கொடபொல எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட மக்களை சந்தித்து உரையாடினார். பாதிக்கப்பட்டவர்களின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்ததுடன், சம்பந்தப்பட்ட நான்கு பொலீஸாரும் இடைநிறுத்தப்படுவர் என அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து நேற்றமுன தினம் மாலை 5 மணியளவிலேயே எதிர்ப்பு நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. நிலைமை வழமைக்குத் திரும்பியது. (க)

# கல்வி நிலை குறித்த கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே26

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த நிபுணர்கள் கலந்துகொள்ளும் குடாநாட்டுக கல்வி நிலை மற்றும் பாடசாலைகளின் நிலை தொடர்பான கருத்தரங்கு நாளையும் நாளைமறுதினமும் யாழ்.கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த இந்த நிபுணர் குழு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்தது. இக்குழுவில் இலங்கைக்கான பிரட்றிக் ஈபேட் மன்றத்தின் வதிவிடப் பிரதிநிதி செல்வி அஸ்ரிக் பெக்கர் மற்றும் அதன் செயற்றிட்ட முகாமையாளர் ஜனாப் மொஹமட் ஆகிய இருவரும் இடம்பெறுகினறனர்.

இரு நாள்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கினை பிரட்றிக் ஈபேட் மன்றம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன ஏற்பாடு செய்துள்ளன.

இதேவேளை,

மேற்படி ஜேர்மன் நாட்டு நிபுணர்கள் இருவரையும் வரவேற்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக்குழுவினர் இன்று பிற்பகல் யாழ்.பல்கலைக் கழகத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர். (ஒ-4-7)

## கடற்றொழில் கல்லூரியில் பயின்றோருக்கு!

யாழ்.கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியில் கடலக எந்திரவியல் பயிற்சி நெறி வகுப்புகளில் இதுவரை கலந்துகொண்டு தமது பயிற்சியை நிறைவு செய்து வெளியேறியுள்ள சகல பயிற்சியாளர்களும் கல்லூரிக்கு வருகை தந்து தமது விவரங்களை உடன் பதிவு செய்யுமாறு கல்லூரி அதிபர் இ.செபஸ்தியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

இவர்கள் பற்றிய விவரங்கள் தமக்கு இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு கொழும்பில் இயங்கும் தலைமைப் பணியகம் தம்மை கோரியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-51)

# ஈராக்கைக் கட்டியெழுப்புவதற்கான 5 அம்சத் திட்டத்தை வெளியிட்டார் புஷ்

ஈராக்கில் ஜனநாயகம் தழைக்கவும் சுதந்திரம் வென்றெடுக்கப்படுவதற்குமான ஐந்து அம்சத் திட்டமொன்றை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ டபிள்யூ.புஷ் அறிவித்தார்.



பென்ஸில்வேனியாவின் இராணுவக் கல்லூரியொன்றிலிருந்து நேற்று முன்தினம் தனது உரையை நிகழ்த்தினார். அதில் அவர் தெரிவித்ததாவது:-

எமது கூட்டுப்படைகள் பலமுள்ளவர்களாக உள்ளனர். எமது முயற்சிகள் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளன. நாம் தளர்ந்துவிடவில்லை, ஈராக்கின் முன்னேற்றத்தை எந்தச் சக்தியும் தடுத்துவிடமுடியாது - என்றார்.

இடைக்கால ஈராக்கிய அரசின் விவரத்தை வெளியிட்ட புஷ், அதில் ஒரு ஜனாதிபதி, இரு உபஜனாதிபதிகள், ஒரு பிரதமர், 26 அமைச்சர்கள் இருப்பார்கள் - என்றார்.

அமெரிக்கப் படைகளை இப்போதுள்ள மட்டத்தில் தொடர்ந்து அங்கு வைத்திருக்கப்போவதாகக் கூறிய அதிபர், கிளர்ச்சிகள் தொடர்வதே இதற்குக் காரணம் என்றார்.

புஷ் ஈராக்கிற்கு அறிவித்த 5 அம்சத் திட்டம் வருமாறு:-

1) ஈராக்கில் இறைமையுள்ள அரசிடம் அதிகாரத்தைக் கையளிப்பது.

2) ஈராக்கில் ஜனநாயகம் நிலைநாட்டப்படுவதற்குத் தேவையான உறுதியையும் பாதுகாப்பையும் உருவாக்கிக்கொள்ள உதவுதல்.

3) ஈராக்கின் உட்கட்டமைப்பைத் தொடர்ந்து கட்டியெழுப்புவது.

4) மேலும் அதிக சர்வதேச உதவியைப் பெற முயல்வது.

5) ஈராக்கிய மக்களால் அதிகாரமளிக்கப்படும் புதிய தலைவர்களை உருவாக்கும் சுதந்திரமான தேசியத் தேர்தல்களை நோக்கி முன்னேறுவது.

அதிபர் புஷ்ஷின் ஈராக்குக்கான திட்டத்தின் பெரும் பகுதி ஏற்கனவே ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நகல் திட்டத்தில் இடம்பெற்றுள்ளன. (ப-8)

# 21 ஆண்டுகள் பழைமையான ஆண்விந்தின் மூலம் குழந்தை

மான்செஸ்டர்,மே26

இருபத்தொரு ஆண்டுகள் பழைமைவாய்ந்த ஆண்விந்தின் மூலம் கருத்தரித்த பெண் ஒருவர் ஆண் குழந்தையொன்றைப் பெற்றெடுத்துள்ளார்.

மான்செஸ்டரில் உள்ள சென் மேரிஸ் மருத்துவமனை டாக்டர்கள் இது ஓர் உலக சாதனை என்று கூறுகின்றனர்.

ஆண்விந்தின் கரு முட்டை இவ்வளவு காலம் பழுதடையாமல் இருப்பது டாக்டர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

குழந்தையின் தந்தை 17வயதாய் இருந்தபோது அவரது விந்தின் கருமுட்டை உறையவைக்கப்பட்டது. அவரது விந்துச் சுரப்பியில் புற்றுநோய்க்கான அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டதால் அவர் ஆண்மையை இழந்திருந்தார். அதற்கு முன்னரே முன்யோசனையுடன் உறைய வைக்கப்பட்ட அவரது விந்து இப்பொழுது பயன்படுத்தப்பட்டு குழந்தை பிறந்துள்ளது. (ப-8)

# சார்ஸ் நோய்க்கு மருந்து கண்டுபிடிப்பு; மனிதர்களிடம் பரிசோதனை ஆரம்பம்


சார்ஸ் எனப்படும் தீவிர மூச்சுத் திணறல் தொற்றுநோய்த் தடுப்பூசியை சீன விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். சோதனைச்சாலையில் அதன் பரிசோதனை முடிவடைந்ததையடுத்து மனிதர்களுக்கு அந்தத் தடுப்பூசியைச் செலுத்தும் பரிசோதனையை சீன விஞ்ஞானிகள் தொடங்கியுள்ளனர்.

மனிதர்களுக்கு இச்சோதனை நடத்தப்படுவது உலகிலேயே இதுதான் முதல்முறை.

இதற்காக 36 இளைஞர்கள் மற்றும் இளம்பெண்களை விஞ்ஞானிகள் தேர்வு செய்துள்ளனர். அவர்களில் 3 இளைஞர்களுக்கும் ஓர் இளம் பெண்ணுக்கும் சனிக்கிழமை அத்தடுப்பூசி மருந்தைச் செலுத்தினர். அவர்களின் உடல் நிலையை விஞ்ஞானிகள் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர்.

கடந்த சில நாள்களில் தடுப்பூசி மருந்தால் அவர்களது உடலில் எந்த வித எதிர்விளைவும் ஏற்படவில்லை என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

அவர்களைத் தொடர்ந்து 210 நாள்களுக்கு விஞ்ஞானிகள் உன்னிப்பாகக் கண்காணிப்பார்கள். சீனத் தலைநகர் பெய்ஜிங்கிலுள்ள கெக்ஸிங் கஜோ புரடக் நிறுவனம் அந்தத் தடுப்பூசியை உருவாக்கியுள்ளது. மனிதர்களுக்கு அதைச் செலுத்திச் சோதனை நடத்தும் பணியை சீன - ஜப்பானிய நட்புறவு மருத்துவமனை மேற்கொண்டுள்ளது. (ஐ-க)





பிரான்ஸின் தலைநகர் பரீஸிலுள்ள சாள்ஸ் டீ கோல்ஸ் விமான நிலையக் கூரை கடந்த 23ஆம் திகதி திடீரென இடிந்து வீழ்ந்தது. வீழ்ந்த கூரையின் ஒரு பகுதியையும், விமான நிலையத்தை பிரான்ஸின் உள்துறை அமைச்சர் விலிப்பன் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# இந்திய வெளியுறவுத்துறைக் கொள்கைகள் புரட்சியாயிராது; புதுப்பொலிவு ஏற்படுத்தும்

## புதிய அமைச்சர் நட்வர் சிங் தெரிவிப்பு

மொஸ்கோ,மே26

காங்கிரஸ் கூட்டணி அரசின் வெளியுறவுக் கொள்கைகள் புரட்சி ஏற்படுத்துவது போல இருக்கமாட்டா. ஆனால், புதுப்பொலிவு ஏற்படுத்தும் வகையில் அமையும் என்று இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் நட்வர் சிங் கூறினார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்ட நட்வர் சிங் நேற்றுமுன்தினம் தனது கடமையைப் பொறுப்பேற்றார். வெளியுறவுத் துறை அமைச்சக அலுவலகத்திற்குப் 15 ஆண்டுகளுக்குப் பின்பு வந்த அமைச்சர் நட்வர் சிங் 'வெளியுறவு அமைச்சகத்தில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டும்" - என்றார். இந்தியா - பாகிஸ்தான் அமைதிப் பேச்சு நடத்துவது, சீனாவுடன் பேச்சு போன்ற நடவடிக்கைகளைத் தொடர்வதுடன் புதிய திட்டங்களும் வடிவமைக்கப்படும் - என்றார்.

பின்னர் நட்வர் சிங் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

சீனாவுடன் சுமுக உறவு வைத்துக் கொள்ளவேண்டும் என்று விரும்புகிறோம். எல்லைப் பிரச்சினை தவிர மற்ற விஷயங்களில் நட்புறவு நாடாக சீனா உருவாகும். இதற்கான வழிமுறைகள் விரைவில் உருவாக்கப்படும்.

இந்தியாவுக்கும், அமெரிக்காவிற்கும் இடையே பலதரப்பு உறவு உண்டு. இரு நாடுகளும் பெரிய ஜனநாயக நாடுகள் என்பதால் உலக சமுதாய நன்மைக்காக இருநாட்டின் உறவுகளும் மேம்படவேண்டும். இரு நாடுகளுக்கும் இடையே நல்லெண்ணம், ஒற்றுமை நிலவுகிறது. அதன் பிரதிபலிப்பாக அமெரிக்காவில் திரளான இந்தியர்கள் உள்ளனர்.

காங்கிரஸ் கூட்டணி அரசின் வெளியுறவுக் கொள்கை புரட்சி ஏற்படுத்துவதுபோல இருக்காது. ஆனால், புதுப்பொலிவு ஏற்படுத்துவதாக அமையும். நாட்டின் நலன் கருதியே முடிவுகள் எடுக்கப்படும். அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகள், ரஷ்யா, சீனா, ஜப்பான் மற்றும் ஆசியாவிலுள்ள பிறநாடுகள் கரீபிய நாடுகள், இஸ்லாமிய நாடுகள், ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளுடன் நெருங்கிய நட்பு வைத்துக் கொள்ளப்படும். சார்க் நாடுகள் உடனான உறவுகளும் பலப்படுத்தப்படும்.

- இவ்வாறு அமைச்சர் நட்வர் சிங் கூறினார்.

## ஆசிய பிராந்தியத்தில்

# அசுத்தமான நீர் மற்றும் உணவால் ஆண்டுக்கு ஏழு லட்சம் பேர் பலி!

கோலாலம்பூர்,மே26

அசுத்த உணவு மற்றும் குடிதண்ணீரை உட்கொள்வதால் ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் ஆண்டுதோறும் 7 லட்சத்துக்கும் மேற்பட்டோர் இறக்கின்றனர்.

மலேஷியாவின் செப்ரெம்பான் நகரில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய ஐ.நா. உணவு மற்றும் விவசாய அமைப்புத் துணைத் தலைவர் ஹார்ட்விக் டிஹான் இத்தகவலைத் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் உணவுப் பாதுகாப்புக் கொள்கை உருவாக்குபவர்கள் மற்றும் சிறப்பு நிபுணர்கள் என 40 நாடுகளில் இருந்து வந்திருந்தவர்கள் பங்கேற்றனர்.

உணவு மற்றும் நீரால் ஏற்படும் நோய்களால், ஒரு நபருக்கு ஆண்டொன்றுக்கு சராசரியாக ரூபா 10 ஆயிரம் செலவாகிறது. வளரும் நாடுகளில் இது மேலும் அதிகமாக இருக்கும் - என்றார் ஹார்ட்விக்.

உணவினால் ஏற்படும் நோய்களால் உற்பத்தித் திறன் குறையும் - என்றார் ஐ.நாவின் உலக சுகாதார அமைப்பின் மலேஷியப் பிரதிநிதி ஹன் தியரு.

ஆசியாவில் பரவிய ஃப்ளு காய்ச்சல் மற்றும் சார்ஸ் நோய்கள் உணவினால் ஏற்படுபவை அல்ல. என்றாலும், உணவுப் பொருள்கள் தயாரிக்கப்பட்ட விதங்கள், விலங்குகள் நடத்தப்பட்ட விதம் ஆகியவற்றுடன் தொடர்புடையதாக அது இருக்கின்றது எனவும் அவர் கூறினார். (ஐ)

# கடல் குதிரைகள் அழியும் ஆபத்து: ஆண்மை விருத்திக்கு மருந்தாவதால்

ஹொங்கொங்,மே26

ஆண்மை விருத்திக்கு கடல் குதிரைகள் மருந்தாகப் பயன்படுவதால் இவை பெருமளவில் கொல்லப்படுகின்றன. இந்த இனம் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஆண்மைத் தன்மை குறைந்த ஆண்களுக்குத் தற்போது 'வயக்ரா' மாத்திரை பெருமளவில் கைகொடுக்கின்றது. ஆனால், இதன் விலை ஏழைகளால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாதது. எனவே, வசதியில்லாதவர்கள் பாரம்பரிய மருத்துவத்தை நாடுகின்றனர். சீனா, ஹொங்கொங் போன்ற பகுதிகளில் கடந்த 600 ஆண்டுகளாகக் கடல் குதிரை, சிறந்த ஆண்மை விருத்தி மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. புளித்த அரிசி கூழில் (கண்டக் கஞ்சி) கடற்குதிரையைக் கலந்து உட்கொண்டு வந்தால் ஆண்மை அதிகரிப்பதாகத் தெற்காசியப் பகுதி மக்கள் நம்புகின்றனர்.

இந்த நம்பிக்கையின் காரணமாக ஒவ்வோர் ஆண்டும் இரண்டரை கோடி கடல் குதிரைகள் உலகம் முழுவதும் கொல்லப்பட்டு மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கடல் குதிரையில் ஆண் குதிரை தான் குட்டிபோடும். பெண் குதிரை முட்டையிட்டு ஆண் குதிரையின் பையில் (கங்காருக்குள்ளது போன்ற முன்புறப்பை) வைத்துவிடும். இரவு நேரங்களில் தினமும் ஆண் கடல் குதிரையும் பெண் கடல் குதிரையும் நடனமாடுமாம். இதனால்தான் இதனை உட்கொள்பவர்களுக்கு வீரியம் அதிகரிப்பதாகக் கூறப்படுகின்றது.

சமீபத்தில் 161 நாடுகளில் கடல் குதிரை எண்ணிக்கை கணக்கெடுக்கப்பட்டபோது, இவற்றின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளமை தெரிய வந்துள்ளது. இதே நிலை நீடித்தால் இந்தக் குதிரையை படத்தில் மட்டுமே பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, கடல் குதிரையை வேட்டையாடுபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# ஆஸ்திரேலியத் தூதரகம் அருகே பக்தாத்தில் குண்டுத் தாக்குதல்!

பக்தாத்தில் உள்ள ஆஸ்திரேலியத் தூதரகத்துக்கு அருகே நேற்று குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் 5 ஈராக்கியர்கள் காயமடைந்தனர்.

பக்தாத்தின் மத்திய ஜடிறியா மாவட்டத்திலுள்ள கார்மா ஹோட்டலிலேயே ஆஸ்திரேலியத் தூதரகம் அமைந்துள்ளது. அதிலிருந்து சுமார் 50மீற்றர் தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்த வோல்ஸ்வெகன் கார் ஒன்றின் கீழ் இருந்தே குண்டு வெடித்தது என்று அமெரிக்க இராணுவக் கேணல் மைக்முரே தெரிவித்தார். இந்தத் தாக்குதல் தற்கொலைத் தாக்குதலா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

வெடிச் சத்தம் கேட்டதும் தீச் சுவாலைகள் எழுந்தது என்று குண்டு வெடிப்பை நேரில் கண்ட பெண் ஒருவர் தெரிவித்தார். உள்ளூர் நேரப்படி காலை 6.15 மணியளவில் இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்களில் ஒரு சிறுவனும் அடக்கம். அவனது நிலைமை மோசமாக உள்ளது என்று வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குண்டுத் தாக்குதலால் ஹோட்டலுக்குப் பெரிய சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை. சில ஜன்னல் கண்ணாடிகள் மட்டுமே நொறுங்கியுள்ளன. தாக்குதல் இடம்பெற்ற சமயத்தில் ஹோட்டலில் மேற்கு நாட்டவர்கள் இருந்தனர் என்று நம்பப்படுகின்றது.

ஆனால், ஆஸ்திரேலியத் தூதரகமே தாக்குதலின் பிரதான இலக்கு என்று ஈராக்கியப் பொலீஸார் தெரிவிக்கின்றனர். ஆஸ்திரேலிய அதிகாரிகள் இதுதொடர்பாகத் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகின்றார்கள்.

## உலக அரங்கில்

தீவிரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்க அதிபர் வில்லியம் புஷ்ஷின் நிலைப்பாட்டை உறுதியாக ஆதரிக்கின்றது ஆஸ்திரேலியா. தனது இராணுவத்தினரையும் அது ஈராக்குக்கு அனுப்பிவைத்துள்ளது.

இதற்கிடையில் -

ஷியா முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் நஜாப் புனித நகரில் முக்டடா அல்சடாரின் ஆதரவாளர்களுக்கும் அமெரிக்கப் படையினருக்கும் இடையில் நடந்த சண்டையில் 30இற்கும் மேற்பட்ட கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர் என்று அமெரிக்க இராணுவம் கூறுகின்றது. இந்தச் சண்டையின்போது அமெரிக்கப் படைகள் மசூதி ஒன்றின் உள்ளே சென்று தாக்குதல் நடத்தியுள்ளன. இதனால் அந்த மசூதியின் ஒருபகுதி மோசமாகச் சேதமடைந்துள்ளது என்று நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இரு தரப்பினரிடையேயும் நடந்த சண்டையில் நஜாப்பில் உள்ள இமாம் அலி மசூதி சேதமடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. மசூதி மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஆனால், அதனை யார் நடத்தினார்கள் என்பது தெரியவரவில்லை என்று கூறப்பட்டது. இந்தக் கலவரத்தில் பொதுமக்கள் சிலரும் காயமடைந்தனர் என்று கூறப்படுகின்றது.

அதற்கு முன்னிரவில் முக்டா அல் சடரின் ஆதரவாளர்களுக்கும் அமெரிக்கப் படையினருக்கும் இடையில் நடந்த சண்டையில் குறைந்தது 5பேர் கொல்லப்பட்டனர்; 19பேர் காயமடைந்தனர் என்று வைத்தியசாலை ஊழியர்கள் தெரிவித்தனர்.

(ஐ-க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

தரமான Prima Broiler மற்றும் பேட்டுக்குஞ்சுகள் 07.06.2004 பிற்பகல விநியோகிக்கப்படும். பருத்தித்துறைக் கிளையிலும் Suddi Farm வட்டுக் கோட்டையிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டி பதிவுசெய்யவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு),19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர் (32515)

பிறீமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் நம்பர் 1 பகிரா இன புறோயிலர் குஞ்சுகளும் 28.05.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P. No.: 2867, 3529. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.(32548)

கொக்குவிலில் கேகேஎஸ் வீதியில் 6 பரப்புக் காணியில் 9 அறைகள் கொண்ட பெரிய மாடிவீடு உடன் விற்பனைக்குண்டு. பெரிய அளவிலான அலுவலகம்,களஞ்சியம்,வைத்திய நிலையம் போன்றவற்றுக்கு உகந்தது. தொடர்பு: விளம்பர இல. 2276 மே/பா உதயன். (32306)

நல்ல நிலையிலுள்ள புதிய லுமாலா சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.பாலசுப்பிரமணியம், 71, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (32309)

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், அழகுசாதனப் பொருள்கள், பூச்சாடிகள், பூங்கன்றுகள், மஞ்சள் மொசந்தாஸ், டல்மேசன், அல்ஷேசன் நாய்க் குட்டிகள், நாய்க் கூடுகள், லவ்பேர்ட்ஸ், குருவிக்கூடுகள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனியர் லேன், தட்டாதெரு, யாழ்ப்பாணம். (32310)

## வாடகைக்கு

காங்கேசன்துறை வீதி, நாவலர் வீதிச் சந்திக்கு அண்மையில் இரண்டு கடைகள் வாடகைக்குண்டு. தொடர்பு: செ.பரமசிவம்பிள்ளை 551, காங்கேசன்துறை வீதி (மனோகராச் சந்தி), யாழ்ப்பாணம். (32281)

## தவறிவிட்டது

துன்னாலை, கரவெட்டியைச் சேர்ந்த தம்பிஐயா தர்ஷினி என்பவருடைய தே.அ.அ.(இல. 765182964V) 20.05.2004 வியாழக்கிழமை கலிகைகக்கும் நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் துன்னாலை கரவெட்டி, 3ஆம் கட்டை மோகன் சைக்கிள் கடையில் தயவு செய்து ஒப்படைத்துதவவும்.(சி-35195)

## மணமகள்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1963 கல்விக்கந்தோர், பீயோன், 1972 MBBS டாக்டர், 1973 இன்சூரன்ஸ் கம்பனி காசாளர், 1973 பத்திரிகை நிறுவன கிளாக் ஆகிய மணமகன்களுக்கு கிரக பாவம் குறைந்த மணமகளகள் தேவை. தொடர்பு: T.சுப்பையா, கிருஷ்ணா திருமண சேவை, செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு. (32311)

### ஆங்கில வகுப்பு

**இலக்கண முறையில் ஆங்கிலம் அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படும்.**

**ஆரம்பம்: 01.06.2004 (செவ்வாய்)**

தொடர்பு:-

**கே.பி.செல்லத்துரை,**
**இல.12,. பலாலி வீதி,**
**யாழ்ப்பாணம்.** (32314)(38)

உங்களது மின்சார பிரச்சினையை தீர்க்க

## HONDA ஜெனரேட்டர்

வீடுகள் , காரியாலயங்கள், ரெஸ்ரூரண்டுகள், கடைகள், மண்டபங்கள், டிஸ்பென்சரிகள் மற்றும் ஏனைய தேவைகளுக்கும்.........



**Ep650, E650K, E1000k, EBK1200, EBK2000, KBK2000S, EBK2800, EBK2800**

ஜெனரல் எக்கியூப்மண்ட்ஸ் லிமிட்டெட்

316, 400, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-12.
போன்: 2345046, 2327264, 2343822-3, 2430799, பக்ஸ்: 2434637

TALENT

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
09 – 06 – 1934



மறைவு
26 – 05 – 1994

### திருமதி திருநாவுக்கரசு திரவியம்

அம்மா உங்கள் புன்சிரிப்பால் நீங்கள்
விடை பெற்றுச் சென்று பத்து
ஆண்டுகள் ஆனதோ?

*உங்கள் ஆத்மா சாந்தி அடைய வெல்வில் முருகனை வேண்டுகின்றோம்.*

*முருகமூர்த்தி வீதி,*
*சங்கானை.*

(32301)(42-21-19-14)

**- குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

வீமன்காமம்

### திருமதி ஜெயசீலன் கௌரிதேவி (தேவி)



தெல்லிப்பழை, வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயசீலன் கௌரிதேவி 20.05.2004 அன்று பிரான்ஸில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற T.K.பொன்னுத்துரை -சரசுபதி தம்பதியினரின் அருமைப் பேர்த்தியும் சூரியதேவ் ஆனந்தன் பொன்னுத்துரை(மகன்), சற்குணசுந்தரி (கனடா) தம்பதியினரின் அருமை மகளும் ஜெயசீலனின்-(ஜேர்மனி) அன்பு மனைவியும் பாமினிதேவி (ஜேர்மனி), கதிர்காமநாதன் (கண்ணன் - கனடா), சிவலிங்கநாதன் (யோகன் - பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரியும் இராஜநாயகம், எலிசபெத் (இளவாலை) தம்பதியினரின் அன்பு மருமகளும் லக்சி (ஜேர்மனி), லக்ஷன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கோபாலகிருஷ்ணன் (ஜேர்மனி), கிருஷ்ணவேணி (கனடா), சார்மிளி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.06.2004 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொன்னுத்துரை குருதேவ் (சிறிய தகப்பன்),
311, நாவலர் வீதி,யாழ்ப்பாணம்.

*ஜெயசீலன் (ஜேர்மனி)*
*TP.No .0049-715182339*

(32305)(38-21-19-14)

# வட கிழக்கு கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்

# NORTH EAST CONSTRUCTION AND TECHNICAL ORGANIZATION (NECTEC)

## பணிநிலை வேண்டுகை

**பணிநிலை 01:- இளநிலைப் பொறியியலாளர் ஆண்/பெண்**
கல்வித்தகைமை:- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் குடிசார் பொறியியல் பட்டதாரி அல்லது இதற்குச் சமமான கல்வித்தகைமையுடன் வேலை அனுபவம்
அகவை:- 25-45 வருடங்கள்
சம்பளம்:- நேரில் பேசித் தீர்க்கப்படும்.

**பணிநிலை 02:- தொழில்நுட்ப அலுவலர் வகுப்பு I தரம் II (ஆண்)**
கல்வித்தகைமை:- அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் NDT சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
அகவை:- 22-45 வருடங்கள்
சம்பளம்:- $\frac{7710-9660}{10\times195} + 2200$

**பணிநிலை 03:- தொழில்நுட்ப அலுவலர் வகுப்பு II தரம் I (ஆண்/பெண்)**
கல்வித்தகைமை:- NCT அல்லது அதற்குச் சமனான தகைமை
சம்பளத்திட்டம்:- $\frac{5060-6260}{10\times120} + 2200$

**பணிநிலை 04:- களஞ்சியக் காப்பாளர் தரம் III (ஆண்)**
கல்வித்தகைமை:- க.பொ.த. (சா/த) கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்
அகவை:- 18-40 வருடங்கள்
சம்பளத் திட்டம்:- $\frac{3000-5000}{20\times100} + 2200$

**பணிநிலை 05:- கட்டுமான வேலை மேற்பார்வையாளர் தரம் III (ஆண்)**
கல்வித்தகைமை:- க.பொ.த. (சா/த) கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது 5 வருட அனுபவம்.
அகவை:- 18-40 வருடங்கள்
சம்பளத்திட்டம்:- $\frac{3075-5575}{20\times125} + 2200$

**பணிநிலை 06:- தொழில்நுட்ப அலுவலர் (பயிலுநர் - ஆண்)**
கல்வித்தகைமை:- க.பொ.த. (சா/த) கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
அகவை:- 18-30 வருடங்கள்
சம்பளம்:- 03 வருடப் பயிற்சியில் முதல் வருடக் கொடுப்பனவு மாதம் 3000/= உணவு, தங்குமிட வசதியுண்டு. 3 வருட பயிற்சிக்கால முடிவில் தகுதிகாண் பரீட்சையில் சித்தியெய்தியவுடன் தொழில்நுட்ப அலுவலராக நியமிக்கப்படுவர்.

**பணிநிலை 07:- கணக்காளர் தரம் III**
கல்வித்தகைமை:- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணக்கியல் பட்டதாரி அல்லது இதற்குச் சமமான கல்வித் தகைமையுடன் 3 வருட வேலை அனுபவம்.
அகவை:- 25-45 வருடங்கள்
சம்பள அளவுத்திட்டம்:- $\frac{6010-7710}{10\times170} + 2200$

**பணிநிலை 08:- கணக்குப் பதிவாளர் தரம் III (ஆண்)**
கல்வித்தகைமை:- க.பொ.த. (உயர்தர) வணிகப் பிரிவில் 3 பாடங்களில் சித்தியுடன் 2 வருட வேலை அனுபவம்.
அகவை:- 20-40 வருடங்கள்
சம்பளத்திட்டம்:- $\frac{4000-5100}{10\times110} + 2200$

**பணிநிலை 09:- கனரக இயந்திர இயக்குநர் (பயிலுநர் ஆண்) (Heavy Machinery Operator)**
கல்வித்தகைமை:- க.பொ.த. (சா/த) கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
அகவை:- 18-30 வருடங்கள்
சம்பளம்:- பயிற்சிக் காலக் கொடுப்பனவு மாதம் 4000/=, உணவு, தங்குமிட வசதியுண்டு.

**பணிநிலை 10:- உழவு இயந்திர ஓட்டுநர், பார ஊர்தி ஓட்டுநர்**
தகைமை:- சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தலுடன் குறைந்தது ஒரு வருட சாரதி அனுபவம் இருத்தல் வேண்டும்.
சம்பளம்:- நேரில் பேசித் தீர்க்கப்படும்.

**பணிநிலை 11:- கணனி இயக்குநர் (ஆண்) தரம் 4**
கல்வித்தகைமை:- க.பொ.த.(சா/த) கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்கல் வேண்டும். அத்துடன், கணனி அறிவு (MS-Word/Excel) 2 வருட அனுபவம்.
அகவை:- 20-40 வருடங்கள்
சம்பளத்திட்டம்:- $\frac{3300-4300}{10\times100} + 2200$

✦ குறிப்பு:- நேர்முகத்தேர்வுக்கு வரும்பொழுது சுயவிவரக் கோவைகளுடன் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்துடன் நேரில் வரவும்.

*நேர்முகத் தேர்வு நாள் விவரம்:*

02.06.2004 காலை 9 மணிதொடக்கம் 3 மணிவரை
கீழே குறிப்பிடப்பட்ட முகவரியில் நடைபெறும்.

(32307) (24)

முகவரி:

**வட கிழக்கு கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்**

**NORTH EAST CONSTRUCTION AND TECHNICAL ORGANIZATION (NECTEC)**

கண்டி வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி (மத்திய கல்லூரிக்கு அருகில்).

யாழ்ப்பாணம்

உதயன்

## அமைதித் தீர்வு காண்பதற்கு வழி

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் சமாதான முயற்சிகள் ஆக்கபூர்வமாக நகருமா, பலன் தருமா என்பவை குறித்தெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் சந்தேகம் வெளியிட்டிருக்கின்றார். தற்போதைய அரசியல் போக்குக் குறித்து அவர் விசனமும் வெளியிட்டிருக்கின்றார்.

வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை என்ற சுயநிர்வாக அலகு ஒன்றை வழங்காமல், அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது சாத்தியமற்றது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், அந்த நிலைப்பாட்டில் தமிழ்த் தேசியம் ஒன்றுபட்டு நிற்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆனால், அதை வழங்க முன்வராமல் - வழமை போல் சிறுபான்மை இனத்தவருக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதைக் கடுமையாக எதிர்க்கும் பேரினவாதப் போக்கில் - சிங்களத் தலைமை இரண்டு பிரிவாகப் பிளவுபட்டு நிற்பதையும், அதனால் சமாதான முயற்சிகள் சந்தேகத்துக்குரியனவாக மாறியிருப்பதையும் அவர் வெளியரங்கமாகக் குறிப்பிட்டும் காட்டியுள்ளார்.

இருபது ஆண்டு காலத்துக்கு முன்னர் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவரது மெய்ப்பாதுகாவலராக இருந்த சீக்கியரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அதையடுத்துச் சீக்கியர்களுக்கு எதிரான பெருங்கலவரம் இந்தியாவில் கட்டவிழ்த்துவிடப்பட்டது.

இன்று அதே இந்திரா காந்தியின் மருமகளான சோனியா காந்தி சீக்கியர் ஒருவரையே பிரதமராக்கியிருக்கின்றார் என்பதை ஒரு முன்னுதாரணமாகக் கொள்ளும்படி சிங்களத் தலைவர்களுக்குக் காட்டியிருக்கின்றார் சம்பந்தன். இதேபோன்று ஈழத்தமிழர்களோடு நீங்கள் ஏன் சமரசம் செய்துகொள்ளக் கூடாது என்றும் அவர் கேட்டிருக்கின்றார்.

ராஜீவ்காந்தி படுகொலைச் சம்பவத்துக்குப் பின்னணியில் காரணமாக அமைந்த - விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான - காட்டிக் கொடுப்புகளையும், துரோகங்களையும், வல்லாதிக்க வலோற்காரச் செயற்பாடுகளையும் மறந்துவிட்டு, வெறுமனே ஈழத் தமிழர்களுக்கு எதிராகக் காழ்ப்புணர்வை வெளிப்படுத்தி வரும் இந்திய அதிகார வர்க்கம், சீக்கியர் விவகாரத்தில் சோனியா நடந்துகொண்ட முறையை ஈழத்தமிழரோடு நல்லிணக்கப் போக்கைக் கடைப்பிடிப்பதற்கான முன்னுதாரணமாக ஏன் கொள்ளக்கூடாது என்ற கேள்வியும் எழுகின்றது.

பெரும்பான்மை இந்துக்களைக் கொண்ட இந்தியாவில் இப்போது ஜனாதிபதி அப்துல்கலாம் ஓர் இஸ்லாமியர். பிரதமர் மன்மோகன்சிங் ஒரு சீக்கியர். அவரைப் பிரதமராக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி ஒரு கிறிஸ்தவர். இவர்கள் எல்லோரும் அங்கு சிறுபான்மை இனங்களை அல்லது மதங்களைச் சேர்ந்தவர்கள்.

'இந்துத்துவம்' என்று பேரினவாதப் போக்கில் கூச்சலிட்ட பாரதீய ஜனதாக்கட்சிக்கு எஞ்சப் போவது எதிர்க்கட்சித் தலைவர் பதவிதான். அப்பதவிக்கு இந்துவான லால்கிருஷ்ண அத்வானி பெரும்பாலும் தெரிவாவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்படி சிறுபான்மை இன, மத மக்களுக்கும் பாகுபாடு காட்டாமல் உரிய கௌரவத்தையும் முக்கியத்துவத்தையும், ஏனையோருக்கு உள்ள அதே உரிமைகளையும் இந்தியா கொடுப்பதால்தான் அது பல்லின, பல்மத, பல்சமூக நாடாக இன்னும் இணக்கத்தோடு மிளிர்கின்றது.

ஆனால், அதே இந்தியா, அயல்நாடுகளின் விடயத்தில் தூண்டிவிடுவதும், குழப்பத்தை ஏற்படுத்துவதும், குசும்பு பண்ணுவதும் வேறு விவகாரங்கள்.

இந்தியத் தலைவர்கள் தம் நாட்டில் நடந்துகொள்வது போன்று இலங்கையிலும் பெரும்பான்மை இனத் தலைவர்கள் சிறுபான்மையினர் விடயத்தில் சகிப்புத் தன்மையோடும் உரிய கௌரவம், மதிப்பு வழங்கும் தாராளப் போக்கோடும் நடந்துகொள்ள முன்வருவார்களேயானால் இனப்பிரச்சினைக்கு இணக்கத் தீர்வு காண்பது அப்படி ஒன்றும் கஷ்டமான காரியமாக இருக்காது.

அந்தச் சகிப்புத்தன்மையையும், தாராளப் போக்கையும் வெளிப்படுத்தும் விவகாரமாக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையைப் பேரினவாதம் எடுத்துக் கொள்ளுமானால் அது ஆக்கபூர்வமான திசையில் நல்லதோர் அடியாக அமையும்.

இல்லாமல், தமிழரான கதிர்காமருக்குப் பிரதமர் பதவி கிட்ட அனுமதிப்பதா என்ற இனவாத வீச்சில் அவ்விவகாரத்தைக் கையாண்டதுபோல, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான இடைவெளியை அடைக்கும் பாலமாக அமையவேண்டிய இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையையும் இனவாதப் போக்கில் அவர்கள் அணுகுவார்களேயால் விளைவு விபரீதமாகவே அமையும். சம்பந்தன் குறிப்பிடுவது போல அமைதி முயற்சிகள் கேள்விக்கும் சந்தேகத்துக்கும் உள்ளாவதும், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு வேறு வழிகளை நாடுவதும் தவிர்க்கமுடியாததாகும்.

## காலத்தின் பதிவு



ஏர் முனைக்கு நிகர் இங்கே எதுவுமேயில்லை! படம்: தீபன்

# பொது இடங்களில் மது அருந்தும் நபர்களுக்கெதிராக நடவடிக்கை

கொழும்பு,மே26

அனுமதி பெறாத இடங்களில், குறிப்பாக வீதியோரங்கள், பூங்காக்கள் போன்ற இடங்களில் இருந்து மது அருந்துபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கும்படி பொலீஸாருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

பொதுப் பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்குகள் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா, பொலீஸ்மா அதிபருக்கு இது தொடர்பாக எழுதியுள்ள ஒரு கடிதத்தில் பொது இடங்களில் மதுபானங்களை அருந்துபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கும்படி சகல பொலீஸ் நிலையங்களுக்கும் அறிவிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

பொது இடங்களில் கூடியிருந்து மாலை நேரங்களிலும் விடுமுறை நாள்களிலும் மது அருந்துகிறார்கள் என்று எனக்குப் புகார்கள் வந்துள்ளன. நானும் வீதிகளில் பிரயாணம் செய்யும்போது இப்படியான சம்பவங்களை அவ தானித்து இருக்கிறேன். பொது இடங்களில் மது அருந்துவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. சமூகச் சீரழிவை இது காட்டுகிறது.

இலங்கை மக்களைப் பற்றித் தவறான எண்ணங்களைப் பிறநாட்டவர் மத்தியில் இது ஏற்படுத்தும். எனவே, இது பற்றி உடனடியாகக் கவனித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உரிய நடவடிக்கைகள் எடுக்கப் பணிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் - இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில் சட்டப்பிரச்சினைகள் ஏதும் இருக்கிறதா என்று ஆராயும்படியும் அவ்வாறு இருப்பின் அதற்கேற்ற நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசனை வழங்கும்படியும் அவர் பொலீஸ்மா அதிபரைக் கேட்டுள்ளார். (ப-10)

# இணுவிலில் வீரமணி ஐயருக்கு சிலை நிறுவப்பட வேண்டும்

## ஒலிநாடா வெளியீட்டு விழாவில் கோரிக்கை

வலி. தெற்கு,மே26

உலகத்துக் கலைஞர்கள் எல்லாம் மகாவித்துவான் வீரமணி ஐயருடைய நினைவோடு ஒன்றித்திருக்கின்ற வேளையில் அவரது பெருமைகளைப் பேணவேண்டியது இணுவில் மக்களின் கடமையல்லவா? இணுவிலில் வீரமணி ஐயருக்கு உருவச்சிலை அமைத்து இணுவில் மக்கள் பெருமைபெறவேண்டும்.

அமரர் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர் இயற்றிய 'இணுவைக் கந்தன் கீர்த்தனைகள்' ஒலி நாடாவை வெளியிட்டு வைத்த, விழாவில் தலைமையுரையாற்றிய செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழக இசை அரசி திருமதி நித்தியஸ்ரீ மகாதேவன் பாடிய பாடல்கள் அடங்கிய இந்த ஒலிநாடா வெளியீடு இணுவில் கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் நடைபெற்றது.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தனது தலைமையுரையில் கூறியதாவது:-

இந்தியாவிலே வருடம்தோறும் தியாகராச சுவாமிகளுக்கு உற்சவம் நடைபெறுவதுபோல இங்கிலாந்துக் கலைஞர்கள் ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதத்தில் 'வீரமணி ஐயா கீர்த்தனை உற்சவம்' நடத்துகின்றார்கள். அங்குள்ள லூட்டிங் அம்மன் ஆலயத்தில் உலகப் பெரியார் படங்களுள் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், குமார் பொன்னம்பலம் அதனைத் தொடர்ந்து வீரமணிஐயர் ஆகியோரின் உருவப்படங்கள் திரைநீக்கம் செய்யப்படவுள்ளன.

வீரமணி ஐயருடன் நித்தமும் சந்தித்துப் பழகிய காரணத்தால் அவரது பெருமைகளை இன்னும் நாங்கள் முழுமையாக விளங்கிக் கொள்ளவில்லை. இலங்கையில் மட்டுமல்ல, வெளிநாடுகளில் எல்லாம் புகழ்பூத்த இளவரசராக விளங்கும் பிறவிக் கலைஞன் வீரமணிஐயர் எங்கள் கிராமத்தில் பிறந்ததையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும். அவரது அற்புத படைப்புக்கள் சொல்லில் அடங்காதவை - என்றார்.

வாழ்த்துரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத தலைவர் க.தேவராஜா கூறியதாவது:-

வீரமணி ஐயருடைய கவி வல்லமைக்கு நிகராக இன்னொருவரை இறைவன் இன்னும் படைக்கவில்லை. அவரது கவிதைகள் நூற்றுக்கணக்கான கீர்த்தனைகளாகவும், ஊஞ்சல் பாடல்களாகவும் அமைந்து ஆலயங்களைப் பெருமையுறச் செய்கின்றன. அவர் இயற்றிய இணுவில் கந்தன் கீர்த்தனைகளை இராசலிங்கம் திருச்செல்வம் குடும்பத்தினர் ஒலிப்பதிவு நாடாக்களாக்கி வெளியிட்டுள்ளனர்.

வீரமணி ஐயர் சைவத்துக்குப் பெருமை தேடித்தந்தாலும் ஏனைய சமயங்களையும் புகழ்ந்து பாட அவர் தவறவில்லை. யேசுநாதரைப் புகழ்ந்து பாடிய அவரது கீர்த்தனைகள் விரைவில் வெளிவர இருக்கின்றன. எல்லா மதங்களையும் மதித்தவர் என்றாலும் சைவசமயத்தில் உள்ள பல விடங்யங்களை கவி வடிவமாக்கிய தனிப்பெருமையுடையவர். பரராசசேகரப் பிள்ளையார் மீது பாடிய கீர்த்தனைகளைப்போல் எதிர்காலத்தில் முருகன்மீது பாடிய கீர்த்தனைகளும் எல்லா ஆலயங்களிலும் ஒலிக்கத் தொடங்கும். - என்றார்.

கலாநிதி எஸ்.சிவலிங்கராசா நூலின் ஆய்வுரையை நிகழ்த்தினார். (ஐ-152)

**நாளை**

வைகாசி 14
வியாழக்கிழமை
(27.05.2004)
திதி : அட்டமி
இரவு 9.13 வரை.
நட்சத்திரம் : மகம்
பகல் 11.17 வரை.
சுபநேரம்: 7.22 - 8.52
ராகுகாலம்: 1.22 - 2.52
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

தன் அறிவை மறைக்கத் தெரியாதவன் முட்டாள்.

# ஆங்கிலக் கல்வியை மேம்படுத்தும் புதிய திட்டத்துக்கு அங்கீகாரம்

கொழும்பு,மே26

பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் ஆங்கிலம் கற்பிப்பதை மேம்படுத்துவதற்கான அவசரத் திட்டமொன்றை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

வாய்மூலமான, செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கற்பித்தல்களை மேற்கொள்ள இப்புதிய திட்டம் வழி வகுக்கின்றது.

எல்லாத் தரங்களிலும் ஆங்கிலத்தில் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு விரைவு பயிற்சிகளை வழங்குவதும் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்களில் பொது ஆங்கிலக் கல்வியைக் கற்பிப்பதற்கு ஊக்கமளிக்கவும் ஆண்டு 6இல் இருந்து 8ஆம் ஆண்டு வரையில் கற்பிக்கக்கூடிய ஆங்கிலமூல ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கவும் இத்திட்டம் வழிவகுக்கும்.

பல்கலைக்கழகங்களால் ஆங்கிலத்தில் தொடர்பாடல்களை மேற்கொள்ளும் திறமைகளை வளர்ப்பது தொடர்பாக ஆராய்வதற்காகப் பேராசிரியர் எஸ்.ஆர்.எஸ்.ஹுலே தலைமையில் நியமிக்கப்பட்டிருந்த குழு தனது அறிக்கையை ஏற்கனவே சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழகங்களில் ஆங்கிலத்தை மாணவர்கள் சரளமாகப் பயன்படுத்தக்கூடிய முறையில் பயிற்சிகள் அமையலாம் என்று தெரிகிறது. (ப)

## கூட்டம்

நெடுந்தீவுப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை முற்பகல் 11 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இதில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைத் தவறாது கலந்துகொள்ளுமாறு நெடுந்தீவுப் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.(8-ரி)

# ஜனாதிபதிக்கு விருது

இலங்கையில் கிராமிய அபிவிருத்தி, சமாதானம் என்பவற்றுக்காகப் பாடுபட்டமை மற்றும் 1970 ஆம ஆண்டுகளில் உணவு, விவசாய ஸ்தாபனத்தின் முயற்சிகளுக்குத் தனிப்பட்ட முறையில் உதவிகளை வழங்கியமை என்பவற்றுக்கு அங்கீகாரம் வழங்கும் விதத்தில் உலக உணவு ஸ்தாபனம் 'சேரஸ்' என்ற மகளிர்களுக்கு வழங்கப்படும் உயர் விருதான தங்கப்பதக்கத்தை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிற்கு வழங்க இருப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது:

உலக உணவு ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் இயக் டீயுப் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொழும்பில் ஜனாதிபதிக்கு இவ்விருதை வழங்குவார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, அன்னை திரேசா, இலங்கையின் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆகியோருக்கு இந்தத் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

# தொழிற் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

கிளிநொச்சி,மே26

ஆசிய , ஜப்பானிய உறவுப்பால நிறுவனமும் கிராமிய பொருளாதார கல்வி, ஆய்வு அபிவிருத்தி நிறுவனமும இணைந்து நடத்தவுள்ள தொழில் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் நிதியுதவியுடன் கிளிநொச்சியில் 155 ஆம் மைல் கல்லில் அமைநதுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில உழவு இயந்திரத்திருத்தம், தளபாடம் அமைத்தல், தையல் பயிற்சி போன்ற பயிற்சிநெறிகள் நடைபெறவுள்ளன.

17வயது தொடக்கம் 29 வயதுக்குட்பட்ட தரம் 10 வரை கல்வி பயின்றவர்கள் இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும் என்று தொழில் பயிற்சிநிலைய உதவிப்பணிப்பாளர் எஸ்.எஸ். சங்கரன் தெரிவித்துள்ளார்.

ஆறு மாதங்கள் கொண்டதாக அமையும் இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை அடுத்தமாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறு அவர் தெரிவித்தார். (ஐ-73)

# தேங்காய் எண்ணெயால் இதயத்துக்குப் பாதகமில்லை

## இந்திய போஷாக்கு நிபுணர் கருத்து

கொழும்பு,மே26

தேங்காய் எண்ணெய் இதயநோய்களுக்கு காரணமான பொருள் என்ற எண்ணம் பரவலாக உள்ளது. மாறாக மனித உடல் முழுமைக்கும் நல்ல போசாக்கு வழங்கும் ஒரு நல்ல உணவுப பொருள் அது.

இவ்வாறு கூறியிருக்கிறார் போஷாக்குத் துறை வல்லுனரான இந்திய மருத்துவர் டாக்டர் ரி.வர்ஸ்மா. இந்தியாவில் இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியின் முன்னாள் போஷாகத்துறை இணை ஆலோசகரான அவர் நியூயோர்க் செல்லும் வழியில் கொழும்பில் தரித்திருந்தபோது இந்தக கருத்தை வெளியிட்டார்.

தேங்காய் எண்ணெய்க்கு எதிரான கருத்து மேற்குலகநாடுகளில் இருந்து தான் வந்தது. தங்கள் நாடுகளில் உற்பத்தியாகும் வேறு உணவு எண்ணெய்களைப் பிரபலமாக்கும் நோக்கத்துடன் அவர்கள் இதைச் செய்திருக்கலாம். ஆசியாவிலுள்ள நாங்கள் பல நூற்றாண்டுகளாக அடிமைப்பட்டிருந்ததால் இன்னமும் அந்த காலனித்துவ மனப்பான்மையிலிருந்து விடுபடாமலிருக்கிறோம் - என்றார் டாக்டர் வர்ஸ்மா.

இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள நாம் பல காலமாக தேங்காய் எண்ணெய்யை எதுவித பக்க விளைவுமில்லாமல் சாப்பிட்டு வருகிறோம். மக்கள் சுகமாகவும் ஆரோக்கியமாகவும் இருந்து வந்துள்ளார்கள். என்ன நடக்கிறது என்றால், நாங்கள் மேற்குலகினர் போல வாழ்க்கையை மாற்றிக்கொள்ள ஆரம்பித்து இந்தப் பொறிக்குள் சிக்கிக் கொண்டு விட்டோம் - என்று மேலும் கூறினார் டாக்டர் வர்ஸ்மா. (ப)

## பட்டதாரித் தகைமைக்கு நிகரானவர்களின் விண்ணப்பமும் ஏற்பு

தென்மராட்சி,மே26

வேலையற்ற பட்டதாரிகளுக்கு பயிற்சியளிக்கும் திட்டத்தின் கீழ் பட்டதாரி தகைமைக்கு நிகரான தகைமையுடையோரின் விண்ணப்பங்களும் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

உயர்கல்வித் தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணபபங்களை பிரதேச செயலகத்தில் ஒபபடைக்கலாமென பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.(8-117)

## கிணற்றில் வீழ்ந்து சிறுமி மரணம்!

தென்மராட்சி,மே26

முகம் கழுவுவதற்காகத் தண்ணீர் அள்ளிய ஆறு வயதுச் சிறுமி கிணற்றில் தவறி வீழ்ந்து பலியான சம்பவம கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7.00 மணியளவில் சாவகச்சேரி அஞ்சல் அலுவலக வீதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி சக்திஅம்மன் வித்தியாலய மாணவியான கச்சாய் வீதியைச் சேர்ந்த சிவராசா சந்திரமதி (வயது6) என்னும் சிறுமியே பலியானவராவார். (8-117)

## தென்மராட்சியில் அதிகரிக்கும் வாகன விபத்துகள்

தென்மராட்சி,மே26

தென்மராட்சிப் பிரதேசத்தில் தினமும் வாகன விபத்துக்கள் இடம்பெற்று வருவதாக வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

ஏ-9 வீதியூடாகச் செல்லும் வாகனங்களின் தொகை அதிகரிப்பினாலும், வேகக் கட்டுப்பாடின்றிச் செல்லும் வாகனங்களினாலுமே விபத்துகள் இடம்பெற்று வருகின்றன.

மோட்டார் சைக்கிள் விபத்துக்களால் காயமடைவோர் தொகையே அதிகமாகக் காணப்படுகிறது. சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் தினமும் இரண்டு பேருக்கு குறையாதோர் வீதிவிபத்துக்களில் சிக்கி அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வெவ்வேறு வீதி விபத்துக்களில வேம்பிராயைச் சேர்ந்த எஸ். சந்திரதாஸ் (வயது19), சங்கத்தானையைச சேர்ந்த எஸ்.சோரபநாதன் (வயது 26) ஆகியோர் காயமடைந்து சாவகசசேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (8-117)

## தென்மராட்சியில் அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், மே26

யாழ்.தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சிக் வலயக்கல்விப் பணிப்பாளர் மு.வ.சேல்வராசா அறிவித்துள்ளார். (ஒ-12)


**வரலாற்று ஆவணங்கள்**

கலாநிதி க.குணராசா - ஈழத்தவர் வரலாறு, The Jaffna Dynasty, மகாவம்சம் தரும் இலங்கைச் சரித்திரம், முத்துத்தம்பிப்பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம், ஜோனின் யாழ்ப்பாணச் சரித்திரம், மயில்வாகனப்புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை, 24 மணிநேரம், மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது. யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு - பிரபல புத்தகசாலைகளில் விற்பனையாகின்றன.

75/10A, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

(38) (32286)



**Jaffna College Institute of Technology**

Vaddukoddai, Jaffna, Sri Lanka.

Established in 1973:

**The following courses will commence from 3rd June 2004**

1. **Diploma Courses**
   (i) Computer Programming & Data Processing
   (ii) Civil Draughtsmanship
   *Duration:- 1 Year (full time)*
2. **Certificate Course in Computer Hardware**
   *Duration:- 4 Months*
   *Fees:- Rs.1000/=*
3. **Computer Certificate Courses in Business Applications**
   * MS Word
   * MS Excel
   * MS Access
   &
   * Power Point
   *Duration:- 4 Months*
   *Fees:- Rs.2500/=*

**Courses ideally suited for those who have sat for the G.C.E.(A/L) exam.**

**For Application Forms and Details Contact:-**

Director,
Jaffna College Institute of Technology,
*Vaddukoddai.*
*T.Phone:- 060-2213139*
*E.mail:- jcit@sltnet.lk*

(C/35187) (34-21-19)






முதன் முறையாக

தொழிற்சாலையின்

5 வருட உத்தரவாதம்

License No : 50445
BS No : 5412:1996
License No : KM41240

ஏக முகவர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516. ஸ்ரீ சங்கராஜ மாவத்தை. கொழும்பு 10.
தொலைபேசி. 2324261-5. 2337283-5
பேக்ஸ்: 2446554

WATERTEC
Simply Better
முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நர்ராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

Access Graphics



**ஜே.கே. அரம் மற்றும் டிரில் பிட்ஸ்**



உலகளாவிய ரீதியில் அரங்களின் பாரிய உற்பத்தியாளர்கள்

இலங்கையில் ஏக முகவர்

**ஜெனரல் இக்குவிப்மென்ஸ் லிமிடட்**

316, 400, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2345046, 2327264, 2343822, 2343823, 2430799 பக்ஸ்: 2434637



**45ஆம் நாள் நினைவஞ்சலி**

பிறப்பு 20 - 03 - 1960



இறப்பு 12 - 04 - 2004

**அமரர் நடராசா சத்தியலிங்கம் (சத்தி)**

*அன்பான கணவனாக பாசமிகு தந்தையாக*
*அரவணைத்திடும் அன்பு நிறை வாழ்வு தந்து*
*விண்ணக வீட்டில் நுழைந்திட்ட அன்புத் தந்தையே!*
உமது ஆத்மசாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*7/1, அன்னசத்திர லேன்,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

அன்பு மனைவி,
பிள்ளைகள்.

(32285) (26-21-19)



**ஈராண்டு ஈரவிழி நினைவுகள்**



**அமரர் இரத்தினம் பாஸ்கரன்**

மலர்வு 18-07-1961

உதிர்வு 20-05-2002

எம் குடும்பத்து சூரியனே!
உன் ஒளியிழந்து தவிக்கும்
எம் வாழ்வில் உன் நினைவுகள் தானே
எம் வானத்து பௌர்ணமி!
காலங்கள் தான் கரைந்தோடும்
உன் சிரிப்பின் விம்பம் மட்டும்
எம் ஈரவிழிக்குள்ளேயே....
உன் நினைவுகளும் சாதனைகளும்
என்றென்றும் உயிரோடு...... எம் நெஞ்சினில்.....

*அண்ணா சிலையடி,*
*கரணவாய்.*

(32271)(42)

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

# எதையும் தாங்குமா இதயம்...?



**இருதய நோய்களிலிருந்து விடுபடுவதற்கும் மாரடைப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்கும் இராஜயோகப் பயிற்சி மிகவும் பயனளிப்பதாகும் என கட்டுரையாளர் டாக்டர் சதீஸ்குமார் குப்தா (இருதய வைத்திய நிபுணர்) விளக்குகிறார்.**

**இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் மவுன்ட் அபு என்ற இடத்தில் அமைந்துள்ள பிரம்மகுமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் இவர், இதுபற்றி விரிவாக ஆய்வுகள் நடத்தியுள்ளார். ஆய்வுகளால் கண்ட உண்மைகளை இக்கட்டுரையில் தந்துள்ளார் இருதய நோய் வைத்திய நிபுணரான அவர்.**

**இவரது கட்டுரையின் முதற்பகுதி கடந்த 19ஆம் திகதி உதயனில் வெளியாகி இருந்தது. இது இரண்டாவது பகுதி.**

## ஆரோக்கியமான வாழ்க்கை முறையினால் இருதய நோய்களைக் குணமாக்கலாம்

வலதுபக்க இதயத்திற்கு ஒக்சிஜன் குறைந்த குருதியானது உடலின் மேல் பாகத்திலிருந்தும், கீழ்ப் பாகத்தில் இருந்தும் வருகின்றது. பின் இந்தக் குருதியானது ஒக்சிஜனால் நிரப்பப்படுவதற்காக நுரையீரலுக்கு அனுப்பப்படுகின்றது. நாங்கள் சுவாசிக்கும்போது ஒக்சிஜன் ($O_2$) உள்ளே வருகின்றது. காபனீரொட்சைட்டு ($CO_2$) வெளியேறுகின்றது. ஒக்சிஜன் ($O_2$) ஏற்றப்பட்ட குருதியானது இடதுபக்க இதயத்திற்கு வருகின்றது. பின் மூளை, கை போன்ற முழு உடலின் பாகங்களிற்கும் செலுத்தப்படுகின்றது. பாரம் தூக்குவது, படி ஏறுவது, ஓடுவது போன்ற பௌதிக அழுத்தங்கள் கூடுகின்ற நேரத்திலே, உதாரணமாக ஒரு 45 வயது உடைய ஒருவர் பாரம் தூக்கும்போது மூச்சுத் திணறுதல் மற்றும் நெஞ்சு பாரமாகுவது போன்ற அறிகுறிகளை வெளிப்படுத்துவாராயின் அது இருதய நோய் இருப்பதற்கான அறிகுறியாக அமைகின்றது.

கெட்ட செய்திகள், உணர்ச்சி வசப்படுவது, கோபப்படுவது, விரைந்து செயற்படுவது (hurry) போன்ற மன அழுத்தங்களும் குடும்ப அழுத்தங்களும்கூட ஒருவருக்கு மூச்சுத் திணறுதல், பாரமான தன்மையை நெஞ்சின் மத்தியில் உணருதல் போன்ற குணங்குறிகளை ஏற்படுத்துமாயின், அதுவும் இருதயநோய் இருப்பதற்கான அடையாளமாகத் திகழ்கின்றன.

மிகக் கடுமையான குளிர் அல்லது வெப்பமான காலநிலைகளின் போது மூச்சுத்திணறுதல், உடலின் உள்ளே ஒரு பாரமான - அசௌகரியமான - உணர்வு போன்றனவும்கூட இருதயத்திற்குக் குருதி வழங்குகின்ற நாடிகளில் அடைப்பு ஏற்பட்டிருப்பதைக் குறிக்கின்ற அடையாளமாகும். நாடியானது இழுபடக் கூடிய (elastic) இயல்புடையதாக இருக்கின்றது. ஆகவே, பௌதிக, மன அழுத்தங்கள ஏற்படுகின்ற வேளையிலே, இந்த நாடியானது மேலும் கூடுதலாக விரிவடைந்து அகலமாகத் திறந்துகொள்வதால் கூடுதலான குருதி விநியோகத்திற்கு உதவுகின்றது.

ஓடுவது, ஏறுவது, பாரம் தூக்குவது, சண்டைபோடுவது போன்ற சந்தர்ப்பங்களிலே இதயத் தொழிற்பாடு கூடுகின்றபோது 6 தடவை மேலதிகமான குருதி இந்த நாடிகளிலே பாயக் கூடியதாக இருக்கின்றது. ஆனால், கொழுப்புப் படிந்து இந்த நாடிகளில் அடைப்பு ஏற்படுகின்றபோது அவை வளையாத "பிளாஸ்டிக்" போன்று மாறிவிடுவதால், குருதி நாடிகளால் விரிவடைய முடியாது. ஆகவே, இதயத் தொழிற்பாடு கூடுதலாக இருக்கின்றவேளையிலே அதற்கு ஏற்ப இரத்தத்தைக் கூடுதலாக இதயத்திற்குக் குருதி நாடிகள் அடைப்புக் காரணமாக வழங்க முடியாமல் இருப்பதால் "அஞ்சைனா" (Angina) என அழைக்கப்படுகின்ற நெஞ்சு வலி ஏற்படுகின்றது. இந்த வலியானது இதயத்திற்குக் குருதி வழங்குகின்ற நாடிகளில் 70 வீதத்திற்கு மேலாக அடைப்பு ஏற்படும் போதே ஏற்படுகின்றது. அதற்குக் குறைவான வீத அடைப்பு ஏற்படும் போது வலி ஏற்படுவதில்லை. ஏனென்றால், அந்த வீதம் வரை இதயம் தன்னைத் தானே கவனித்துக்கொள்கின்றது. சாதாரண இதயமானது 6 தடவை மேலதிகமான குருதியை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

இந்தக் குருதி நாடிகளில் சிறிது சிறிதாக 5 வயதில் இருந்தே அடைப்பு ஏற்பட ஆரம்பிக்கின்றது. கெட்ட கொழுப்பு (bad cholesterol) LDL குருதி நாடிகளின் சுவரில் ஒட்டிக் கொள்கின்றது. நல்ல கொலஸ்திரோல் எனபடுகின்ற கொழுப்பு HDL அவ்வாறு ஒட்டுவதில்லை. அதற்குப் பதிலாக நாடிகளின் சுவரில் ஒட்டுகின்ற கெட்ட கொழுப்பினை அகற்றக் கூடியதாக இருக்கின்றது. 25வீதமான கொலஸ்திரோல் எமக்கு உணவின் மூலம் கிடைக்கின்றது. 75 வீதமான கொலஸ்திரோல் ஈரலில் காணப்படுகின்றது. இதன் தன்மையானது மனநிலைக்கு ஏற்றவாறு மாறுபடுகின்றது. மனமானது அமைதியாக, அன்பாக, சந்தோஷமாக, பயமற்றதாக, திருப்தியாக இருக்கும் போது ஈரலில் நல்ல கொலஸ்திரோல் உருவாகின்றது.

### ஒரு பரிசோதனை

கோபம், விரைவு, பயம், திருப்தியற்ற தன்மை இருக்கும்போது கெட்ட கொலஸ்திரோல் உருவாகின்றது. ஆகவே, 25 வீதமான நோயானது நம் உணவின் அடிப்படையிலும் 75 வீதமான நோயானது எம் சிந்தனைகள், நடத்தை, மனோ நிலையின் அடிப்படையிலும் ஏற்படுகின்றன. இதைப் பரிசோதிப்பதற்கு ஒரு சிறு பரீட்சையை நாம் செய்து பார்க்கலாம். உங்கள் நடுவிரலை மடித்து இரு புருவங்களுக்கும் மத்தியில் உள்ள நெற்றியின் நடுப்பகுதியைத் தொடும் போது வெப்பமான தன்மையை உணர்வீர்களானால் அந்த நேரத்தில் தலை சூடாக இருக்கும்போது இதயம குளிராக இருக்கின்றது. அப்போது

**தமிழில்: நந்தன்**

கொலஸ்திரோல், வெண்ணெய்போன்ற தன்மையுடையதால் அது உறைகின்றது. அதனால் இதயத்தின் முடியுருநாடிகளில் அடைப்பு ஏற்படுகின்றது.

அவசரப்படுகின்ற குணம், கோபம், அமைதியற்ற தன்மை, பயம், அதிருப்தி, மனத்தளர்வு போன்றன தலை சூடாவதற்குக் காரணமாக அமைகின்றன. அந்த நேரத்திலே இதயத்தில் அடைப்பு ஏற்படுகின்றது. தலை குளிராக இருக்கும்போது இதயம் சூடாக இருக்கின்றது. அப்போது கொலஸ்தரோல் உருகுகின்றது. அடைப்புக்கள் மீண்டும் திறந்துகொள்கின்றன. ஆகவே, நாம் ஒரு நாளைக்கு எவ்வளவு நேரம் எம் தலையைச் சூடாக வைத்திருக்கின்றோம் என்பதிலேயே இதயத்தின் முடியுருநாடிகளில் ஏற்படும் அடைப்பின் அளவு தங்கியுள்ளது.

### கனவுகளின் விளைவுகள்

நாங்கள் குளிராக இருக்கின்ற வேளையிலே அதாவது அமைதியாக, அன்பாக, சந்தோஷமாக இருக்கும் போது, மற்றவர்களுக்கு உதவுவதோடு, ஒத்துழைக்கும்போது, திருப்தியாக இருக்கும்போது, எங்கள் இருதயத்தின் முடியுருநாடிகள் திறந்துகொள்கின்றன. எப்படிப்பட்ட கனவுகளை இரவில் காண்கின்றோம் என்பதுகூட இதற்குக் காரணமாக இருக்கின்றது. சூடான கனவுகள், இதயத்தின் முடியுருநாடிகளில் அடைப்பை ஏற்படுத்தும். குளிரான, இனிமையான கனவுகள் அவற்றைத் திறந்துகொள்ளச் செய்கின்றன. கனவுகளின் வகை அன்று நீங்கள் செய்த செயல், சுபாவம் என்பவற்றில் தங்கியுள்ளது. ஆகவே, பதினைந்து வினாடிகளுக்கு ஒருமுறை உங்களை நீங்கள் பரிசோதித்து உங்கள் தலையைக் குளிராக வைத்திருக்க முயற்சி செய்யுங்கள். 75 வீதமான கொலஸ்திரோல் உங்கள் சுபாவம், மனோநிலையிலேயே தங்கியுள்ளது. பல நேரங்களில நாம் தவறாகச் சிந்திக்கின்றோம்; பதற்றம் அடைகின்றோம். அதனால் கெட்ட கொலஸ்திரோல் (LDL வகை) உருவாகின்றது.

ஒரு நல்ல கொலஸ்திரோல் (HDL வகை) மூன்று கெட்ட கொலஸ்திரோலை (LDL வகை) நீக்கக் கூடியதாக இருக்கின்றது. ஆனால், மேலதிகமாக உருவாகும் கெட்ட கொலஸ்திரோல் (LDL) குருதி நாடிகளின் சுவரினுள்சென்று படியத் தொடங்குகின்றது. குருதி நாடிகளின் சுவரில் வெடிப்பு ஏற்படுகின்றபோது அதனூடாக கொலஸ்திரோல உட்செல்கின்றது. புகைப்பிடித்தல், மது அருந்துதல் மற்றும் ஒருவரின் சுபாவம் அதாவது அவசரமாகச் செயற்படல், கோபம், உணர்ச்சி வசப்படுவது, கவலை, நேரத்தால் ஏற்படும் அழுத்தம், போட்டி போடுதல் என்பன இருதயத்திற்கு முக்கிய காரணங்களாக விளங்குகின்றன.

70 வீதத்திற்கு மேலான அடைப்பு ஏற்படும்போது நெஞ்சுவலி ஏற்படுகின்றது. அத்தோடு, அன்பில்லாத உணர்வு, கோபம், தனிமை, அகங்காரம், பயம், பாதுகாப்பின்மை போன்ற உளவியல் காரணங்களால் இந்த அடைப்புகளில் வெடிப்பு ஏற்பட்டு இரத்தம் வெளியேறும்போது இரத்தம் கட்டிபடத் தொடங்குகின்றது. இதனால், நாடிகள் திடீரென 100 வீதம் அடைத்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. இது மாரடைப்பை ஏற்படுத்துகின்றது.

25 வீதமான நோயாளிகள் வைத்தியசாலையை வந்து அடைவதற்கு முன்பே இறந்துவிடுகின்றார்கள். இதயத்தின் பெரிய பாகமானது மாரடைப்பின்போது இறந்துபோவதாகும். இதனால் இரத்தத்தை இதயத்தால் மூளை மற்றும் உடலின் பாகங்களுக்குச் செலுத்தமுடியாமல் இருப்பதால் இறப்பு ஏற்படுகின்றது. 75 வீத நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றார்கள். இரத்தக் கட்டியைக் கரைப்பதற்கான ஊசி போடப்படுகின்றது. ஆனால, எந்த மருந்தினாலும் அடைப்பைத் திறக்கமுடியாது. 'அஞ்சியோ பிளாஸ்டி' முறை மூலம் அடைப்பானது ஒரு புறமாக தள்ளபபடுகின்றது. இதற்கு இந்தியாவில் ஒரு லட்சம் ரூபாய் செலவாகின்றது. 5 - 6 மாதத்தின் பின் 40 வீதமானவை மீண்டும் அடைத்துக்கொள்கின்றன. ஆகவே, மீண்டும் 'அஞ்சியோ பிளாஸ்டி' செய்யவேண்டியுள்ளது. இந்தமுறை மூலமான சிகிச்சையின்பின், அடைப்புகள் வெகு




விரைவில் மீண்டும் தோன்றுவதால் 1990ஆம் ஆண்டின் பிற்பகுதியில் "ஸ்ரென்ற்" (Stent) முறை அறிமுகப் படுத்தப்பட்டது.

'அஞ்சியோ பிளாஸ்டி'யைப் போல் பலூனைப் பாவித்து அடைப்பு உள்ள இடத்தை விரிவடையச் செய்த பின், "ஸ்டென்ற்" அதாவது உலோகச் சுருள் ஒன்று அந்த இடத்தில் வைக்கப்படுகின்றது. ஆனாலும், இதன்பிறகு கூட 30 வீத நாடிகளில் மீண்டும் அடைப்பு ஏற்படுவது அவதானிக்கப்பட்டது. இதற்கு ஒரு லட்சத்து எண்பது ஆயிரம் இந்தியன் ரூபாய் செலவாகின்றது. இந்த உலோகச்சுருள் இதயத்தில் இருப்பதால் அதிகளவு பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. இதன்பின் "பை பாஸ்" (By Pass) எனப்படுகின்ற சத்திர சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தமுறை மூலம் கையில் அல்லது காலில் இருந்து நாளமானது எடுக்கப்பட்டு அடைப்பைக் கடந்து அதற்குக் குறுககாக இணைக்கப்படுகின்றது. இதுவும்கூட ஒரு தற்காலிக சிகிச்சை முறையே ஆகும். இதன்போது அடைப்பு ஏற்படுவதற்கான மூலகாரணங்கள் குணமாக்கவோ, நீக்கவோ படுவதில்லை. ஆகையால், மீண்டும் அடைப்பு ஏற்படக்கூடும். அந்தச் சத்திர சிகிச்சையின் பின்னரும் 10 வீதமானோர் ஒவ்வொரு வருடமும் மீண்டும் இந்தச் சத்திர சிகிச்சையைச் செய்யவேண்டியுள்ளது. இதற்கு இந்தியாவில் இரண்டு லட்சம், இலங்கையில் ஏறத்தாழ 3½ லட்சமும் செலவாகின்றது.

### சத்திரசிகிச்சையும் மருந்துப் பாவனையும்

22 வருட காலமாக நடத்தப்பட்ட ஆராய்ச்சி ஒன்றிலே அவர்கள் இந்தச் சத்திரசிகிச்சைக்கு உள்ளான நோயாளிகளையும் சத்திரசிகிச்சைக்குட்படாமல் மருந்துகளை மாத்திரம் உபயோகிக்கும் நோயாளிகளையும் ஆராய்ந்து பார்த்தபோது, மருந்துகளை மட்டும் உபயோகிக்கும் நோயாளிகளின் வாழ்க்கையானது நீண்டகாலம் சிறப்பானதாகக் காணப்பட்டது. சத்திர சிகிச்சைக்கு உட்பட்டவர்கள், மருந்துகளை உபயோகிப்பவர்களுக்குச் சமமாக 3 தொடக்கம் 8 வருடம் வரை காணப்பட்டார்கள். ஆனால், நீண்டகாலத்திற்குப் பார்க்கும்போது சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவரிலும் பார்க்க மருந்துகளைப் பாவிப்பவர்கள் சிறப்பாகக் காணப்பட்டார்கள்.

இதிலிருந்து சத்திர சிகிச்சையானது உண்மையான சிகிச்சை முறை அல்ல. இதற்கு வசதி இல்லாவிட்டால் இது ஒரு பெரிய பிரச்சினை இல்லை. இந்தச் சிகிச்சை முறைகள் 70 வீதத்திற்கும் மேலான அடைப்புள்ள நாடிகளுக்கே செய்யப்படுகின்றது. 70 வீதத்திலும் குறைவான அடைப்பு உள்ள போது நெஞ்சுவலி ஏற்படுவதில்லை. ஆனால், அநேகமான மாரடைப்பு ஏறத்தாழ 68 வீதமானவை நாடிகளிலும் 5? வீததிலும் குறைவான அடைப்பு உள்ளபோதே ஏற்படுகின்றது. 18 வதமான மாரடைப்பு 50 வீதம் - 70வீதமான அடைப்பு உள்ளபோது ஏற்படுகின்றது. காரணம், இந்த அடைப்புக்களில் படிந்துள்ள கொலஸ்திரோல், மிருதுவானதாக இருக்கின்றது. பயம, கோபம், பதற்றம் போன்றவற்றின் போது இந்த அடைப்பு வெடித்து அந்த இடத்தில் இரத்தம் கட்டிபடுவதால், திடீரென முழுமையான அடைப்பு ஏற்படுகின்றது. ஆனால், நாடிகளில் 70 வீதத்திற்கும் மேலான அடைப்பு ஏற்படும்போது நாடியானது கடினமானதாக மாறுகின்றது. ஏனென்றால் கொலஸ்திரோல் மறையத் தொடங்க, அதற்குப் பதிலாக அதிக நார்ப்பதார்த்தம் சேருவதால் அது கடினமாகின்றது. ஆகவே, 70 வீதத்திற்கும் மேலான அடைப்பு ஏற்படும்போது வெடிக்கின்ற சந்தர்ப்பம் குறைவாக இருக்கின்றது.

பல ஆராய்ச்சிகள் 86 வீதமான மாரடைப்பு 70 வீதத்திற்கும் குறைவான அடைப்புள்ளபோதே ஏற்படுவதாகக் காட்டியுள்ளன. 14 வீத மாரடைப்பு 70 வீதத்திற்கும் மேலான அடைப்புக்களால் ஏற்படுகின்றது. ஆகவே, 'அஞ்சியோ பிளாஸ்டி' அல்லது 'பை பாஸ்' சத்திர சிகிச்சைக்குப் பின்னரும் 86 வீதம் மாரடைப்பு ஏற்பட வாய்ப்புண்டு. ஆகவே, இந்த முறைகளால் மாரடைப்பு ஏற்படுவதைத் தடுக்கமுடியாது. ஆனால், நெஞ்சுவலியில் இருந்து நிவாரணம் கிடைக்கலாம். சிலவேளைகளில் இந்தச் சிகிச்சை முறைகளுக்கான பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக வீடுகளை, சொத்துக்களை விற்கின்றார்கள். மீண்டும் மாரடைப்பு ஏற்படும்போது மீண்டும் ஒருமுறை இந்தச் சிகிச்சை முறைகளுக்குள்ளாக வேண்டி வரும்போது, அவர்கள் எதை விற்பார்கள்?

### புதிய ஆராய்ச்சி

மரணமானது 'அஞ்சியோபிளாஸ்டி' முறையினாலேயோ அல்லது சத்திர சிகிச்சை முறையினாலேயோ தீர்மானிக்கப்படுவதில்லை. இந்த மாதிரியான பரிதாபமான நிலையில் இருக்கின்ற நோயாளிகளுக்கு உதவுவதற்காக, முழு உலகத்திற்கும் உதவுவற்காக நான் ஒரு புதிய ஆராய்ச்சியைத் தொடங்குவதற்குத் திட்டமிட்டேன். இதற்காக எம் சௌகரியங்களைத் தியாகம்செய்து அபு மலைக்கு வந்தோம். அங்கேயே நாம் "முடியுருநாடிகளில் ஏற்படும் அடைப்பை ஆரோக்கிய வாழ்வின் மூலம் திறக்கச்செய்வதற்கான" இந்த ஆராய்ச்சியைத் தொடங்கினோம்.

40 வருட காலங்களாகப் படிப்படியாக ஏற்பட்ட இப்படியான அடைப்புக்களை இந்த முறையினால் நாம் நிச்சயமாக நீக்கலாம் என எண்ணினோம். இந்த நிகழ்ச்சியானது பின்வரும் அம்சங்களைக் கொண்டதாக இருந்தது.

1. இராஜயோக தியானப் பயிற்சி மூலம் மன அழுத்தத்தை நீக்குவது.
2. காற்றோட்டமான சூழலில் நடுத்தரமான உடற்பயிற்சி செய்தல்.
3. குறைந்த கொலஸ்திரோலையும், அதிக நார்ப்பொருள்களையும் கொண்ட தாவர உணவு.

இந்திய சுகாதார குடும்பநல அமைச்சின் அனுமதியோடு அபுமலையில் அமைந்துள்ள பிரம்மகுமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் "குளோபல் வைத்தியசாலையில்" சில மருத்துவக் கல்லூரிகள் மற்றும் வேறு வைத்திய சாலைகள், பிரம்ம குமாரிகள் ஆன்மீகப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின ஒத்துழைப்போடு இந்த ஆராய்ச்சியை நடத்தினோம். இந்த ஆராய்ச்சித் திட்டத்தை நாம் ஆசியாவைச் சேர்ந்த இருதய நிபுணர்களின் கூட்டம் சிங்கப்பூரில் நடந்தபோது சமர்ப்பித்தோம். பல பிரபல இருதய நிபுணர்கள் பல்வேறு நாடுகளையும் சேர்ந்தவர்கள் இதை வரவேற்றார்கள். அவர்கள் இந்த ஆராய்ச்சியின் பெறுபேறுகள் மிகவும் வியக்கத்தக்கதாக உள்ளதாகக் கூறினார்கள். அவர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தைத் தம் நாடுகளிலும் வந்து செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

முடியுருநாடிகளில் ஏற்படும் அடைப்பினால் ஏற்படுகின்ற இருதய நோயானது உலகில் மரணத்துக்குக் காரணமான முதற்தரமான நோயாக இருக்கிறது. 'அஞ்சியோ (பிளாஸ்டி முறை', சத்திர சிகிச்சை முறை, (BY pass Surgery) கொலஸ்திரோல் மட்டத்தைக் குறைக்கின்ற மருந்துகள் இந்த நோயினால் ஏற்படக்கூடிய தாக்கத்தில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

### யாரைக் கூடுதலாகப் பாதிக்கிறது?

சில ஆராய்ச்சிகள் உளவியல் காரணிகள் இந்த நோய்க்கு முக்கியமான காரணமாக இருப்பதாகக் காட்டியுள்ளன. உதாரணமாக 'A' வகையைச் சேர்ந்த நடத்தை அதாவது அவர்கள் பல வேலைகளை ஒரே நாளில் செய்துவிட எதிர்பார்ப்பதால் பதற்றத்தோடு அவசரமாகச் செயற்படுவார்கள். வேலைப்பழு உடையவர்களாகவும், இந்த வேலையை இந்த விதத்தில்தான் செய்யவேண்டுமென்ற எதிர்பார்ப்பு உடையவர்களாகவும் இருப்பார்கள். இல்லையேல் எளிதில் கோபம் கொள்வார்கள். அவர்கள் மற்றவர்களில் சம்பூரணத்தை எதிர்பார்ப்பார்கள். மற்றவர்கள் பொய் பேசுவதை அவர்களால் சகித்துக் கொள்ளமுடிவதில்லை. அவர்கள் தாங்களே அனுபவசாலிகள் என்று எண்ணுகிறார்கள். இப்படிப்பட்ட நடத்தையை உடையவர்களே மாரடைப்பு நோயால கூடுதலாகத் தாக்கப்படுகிறார்கள்.

எதிர்காலத்தில் என்ன நடந்துவிடுமோ? போன்ற பயம் கலந்த கவலைப்படுகின்ற சுபாவமுடையவர்கள, உதாரணமாக கணவரோ அல்லது மகனோ வீடு திரும்பக் காலதாமதமாகிவிட்டால் அவர்களுக்கு என்ன நடந்துவிட்டதோ என்று எதிர்மறையாக எண்ணிக் கவலைப்படுவது, மனத்தளர்வு, தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள யாரும் இல்லையே என்ற உணர்வு, மற்றவர்களை நம்பாத சுபாவம், மற்றவர்களில் குறை காணுதல், கண்டனம் செய்தல், பழி வாங்குகின்ற சுபாவம் போன்ற உளவியல் காரணிகள் மாரடைப்பு நோய்க்குக் காரணமாக அமைகின்றன. வேலை, குடும்ப அழுத்தங்களும் மாரடைப்பை ஏற்படுத்தக் கூடிய காரணிகளாக அமைகின்றன.

(வளரும்)



Jayoda ஜயோதா ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6215085 முதல் 6225991 வரை
சீட்டிழுப்பு இல. 35 திகதி 24-05-2004

வெற்றி எண்கள் **0 0 7 9 4 2** சுப்பர் எண் **23**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,99,49,750/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,99,49,750/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 97 | 5,000/- | 4,85,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 962 | 500/- | 4,81,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,635 | 50/- | 4,81,750/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 95,463 | 10/- | 9,54,630/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 100 | 1,000/- | 100,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 958 | 100/- | 95,800/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,542 | 20/- | 1,90,840/- |
| மொத்தம் | 1,16,777 | | 43,34,020/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 43,34,020/-

இந்த வியாழக்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட்
ரூ. **2,02,17,600/-**

தொடர் இல. 7192596 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 மே 27 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

**6225719-5-81**
**6222559-9-40**
**6218707-4-10**
**6216441-3-70**
**6216381-4-88**



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



HAPPY BIRTHDAY

யூட் - றஜீதா
தம்பதியினரின்
செல்வப் புதல்வன்
செல்வன்
**தினதயான்**
தனது முதலாவது பிறந்தநாளை பிரான்ஸிலுள்ள தனது இல்லத்தில் இன்று (26.05.2004) புதன்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, பாஷையூரில் வசித்துவரும் ஐயா, அம்மம்மா, அன்ரா, மாமாமார், பூட்டி, அக்காமார் ஆகியோர் அனைவரும் கோடியற்புதராம் அந்தோனியாரின் [illegible]ளால் பல கலையும் பெற்றுச் சீரும் சிறப்புடனும் [illegible]ழ்த்துகின்றார்கள்.

இல. 6, புதுவீதி,
பாஷையூர். (32278)(42-12-21)

தகவல்:
திரு.திருமதி யேசையா.


## தொழில் பயிற்சிநெறி - விண்ணப்பம் கோரல்

யு.என்.எச்.சி.ஆர் (UNHCR) நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஆசிய யப்பானிய உறவுப்பால நிறுவனமும் (BAJ) கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமும் (REERDO) இணைந்து 155ஆம் மைல் கல் ஏ-9 வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள தொழில் பயிற்சி நிலையத்தில் நடத்தும் தொழிற்பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

**பயிற்சி நெறிகள்:**

1. உழவு இயந்திரத் திருத்தம்
2. தளபாடம் அமைத்தல் (பெண்கள்)
3. தையல் பயிற்சி (பெண்கள்)

*பயிற்சி நெறிகளுக்கான காலம்: 6 மாதங்கள்*

**தகைமைகள்:**

- 17-29 வயதுக்குட்பட்டவராயிருத்தல் வேண்டும்.
- ஆண்டு 10 வரை கல்வி கற்றவராயிருத்தல் வேண்டும்.
- நலிவுற்ற குடும்ப அங்கத்தவராயிருத்தல் வேண்டும்.

**பயிற்சியின் அநுகூலங்கள்:**

- தொழில்சார் பயிற்சிச் சான்றிதழ்
- சுயதொழில் முயற்சிக்கான தகுதி

**உதவுதொகை:**

- பயிற்சிக்காலத்தில் உழவு இயந்திரத்திருத்தம் தவிர்ந்த மற்றைய இரு பயிற்சி நெறிகளுக்குமான உதவுதொகை வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 12.06.2004**

*குறிப்பு*- ஏற்கனவே மேற்படி பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் மீளவும் விண்ணப்பிக்கும்படி வேண்டப்படுகின்றனர். பயிற்சிக்கான விண்ணப் பங்கள் யாவும் சுயமாகத் தயாரிக்கப்பட்டு சுயவிவரங்கள் சரிவரப் பூர்த்தி செய்யப்பட்டுத் தபாலிலோ அல்லது நேரிலோ மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

- பணிப்பாளர்.

தொழிற்பயிற்சி நிலையம்,
155ஆம் மைல் கல்,
ஏ-9 வீதி,
தொண்டமான் நகர்,
கிளிநொச்சி,
(சி-35188)(21-12)

## இந்துக் குருமார் கூட்டம்

வலி.தெற்கு,மே26

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் வருடாந்த மகாசபைப் பொதுக் கூட்டம் அடுத்த மாதம் ஐந்தாம் திகதி பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெற உள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக் குருமார் ஒன்றிய குருகுல கலாசாலை மண்டபத்தில் சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் தலைமையில் கூட்டம் இடம்பெறும்.

(ஐ-152)

## வாழ்த்துகின்றோம்



**திரு.த.சந்திரசேகரம்**
அதிபர் (SLPS-2I)
யா/தட்டாதெரு மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, பருத்தித்துறை

*அவர்கள் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணி யாற்றி (25-05-2004) செவ்வாய்க்கிழமை அகவை அறுபதை அடைந்து ஓய்வு பெறுகின்றார். அதிபர் அவர்கள் தமது ஓய்வு காலத்தில் சமூக சேவைகள் பல புரிந்து நோயற்ற வாழ்வுடன் நீண்ட ஆயுளும் பெற்று சிறப்புடன் வாழ எல்லாம்வல்ல இறைவனின் ஆசியை வேண்டி வாழ்த்துகின்றோம்.*

ஆசிரியர்கள்,
யா/தட்டாதெரு மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை,
பருத்தித்துறை.
(32320)(42)

## தவறிவிட்டது

இராமநாதன் துஷ்யந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 871341672V) கன்னாதிட்டிக்கும் கந்தர்மடத்திற்கும் இடையில் 23.05.2004 ஞாயிற்றுக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில தயவுசெய்து ஒப்படைத்துதவவும்.

17B, மணற்தறை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(32312) (13-14-26)


## NET CALL CABS SERVICE

Call: 0777-719286 a (A/C)
Van For Hire Will Be At Your Door-Step Within The Peninsula
அழையுங்கள் 0777-719286
ஒரு குளிரூட்டப்பட்ட வான் உங்கள் வீட்டு வாசலில் வந்து நிற்கும். நியாயமான கட்டணங்கள். யாழ்.குடா சேவை மட்டும். (சி-35204)(43)

## SEVEN TO ELEVEN COM SERVICE

7 TO 11 COM - Navaly South - Manipay
★ IDD CALLS - குறைந்த கட்டணங்களில்!
★ Net 2 Phone - நிமிடம் ரூ.10/= மட்டுமே!
★ Computer Games - சிறுவர்களிற்கு மணித்தியாலம் ரூ.40/= மட்டுமே!
021-2223706,
நவாலி தெற்கு, மானிப்பாய்.
(C/35205)(38)



## மெகா கொம்ப்யூட்டர் கற்கை நெறிகளுக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சை 5-6-2004

- *Diploma in Computer Software Engineering* 1 DCSE
- *Professional Diploma in Graphic Design* 2 PDGD
- *Diploma in Web Multimedia* 3 DWM
- *Advanced Diploma in Visual Programming* 4 ADVP
- *Diploma in Office Automation* 5 DOA
- *Advanced Diploma in Digital Design* 6 ADDD

யாழ் குடா நாட்டில் முதன்முறையாக ஏசியன் கொம்ப்யூட்டர்ஸ் நடாத்தும் இப்புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி 2004 - 2005 கல்வி ஆண்டிற்கான சமகால தொழில்சார் கணனி கற்கை நெறிகளில் ஒன்றை தெரிவு செய்து முறையே 40%, 50%, 60% மற்றும் 75% வரையிலான சிறப்புப் புலமைப்பரிசில்களை பெற்றுக்கொள்ளலாம். எமது பாடநெறிகள் அனைத்தும் இங்கிலாந்து ICM, ACP, IMIS மற்றும் CSC, TATA இந்திய உயர்கல்வி நிலையங்களின் நேரடி அங்கீகாரம் பெற்றவை.

**இத்திட்டத்தில் யார் பங்குபற்றலாம் ?**

மொழி, வயதெல்லை, முன் அனுபவம் தராதரம் என்ற பாகுபாடின்றி கொம்ப்யூட்டர் கல்வியில் ஆர்வமுடைய அனைவருக்கும் மற்றும் குறிப்பாக இம்முறை A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கும் ஓர் சந்தர்ப்பம் அளிப்பதுடன் சிறப்புக் கட்டணக் கழிவையும் வழங்குவதே இப்புலமைப்பரிசில் திட்டத்தின் உயரிய நோக்கமாகும்.

**இலவச பரீட்சைகள்**

5-6-2004 சனிக்கிழமை நடைபெறும் இப்புலமைப்பரிசில் பரீட்சை பொது அறிவு மற்றும் O/L பாடத்திட்டத்தை சார்ந்ததாக தமிழ் மொழியில் நடைபெறும்.

**இலவச அனுமதி**

இப்புலமைப்பரிசில் பரீட்சை முற்றிலும் இலவசம். யாழ்நகர், சுண்ணாகம் மற்றும் நெல்லியடியில் உள்ள எமது பயிற்சி நிலையங்களில் இலவச அனுமதி அட்டைகளையும், பரீட்சை பற்றிய விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

# ASIAN COMPUTER SYSTEMS

| யாழ்ப்பாணம் | சுண்ணாகம் | நெல்லியடி |
|---|---|---|
| 2 G,ஸ்டான்லி வீதி,யாழ்ப்பாணம். Tel:021-222 5677 | பிரசன்னா கொம்ப்யூட்டர்ஸ் K. K. S. வீதி, சுண்ணாகம். | கொடிகாமம் ரோட், நெல்லியடி. (குரவெட்டி தபாலகத்திற்கு முன்பாக) |

# வலி.வடக்கில் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கக் கோரும் பெண்கள்

## கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம்,மே26

வலிகாமம் வடக்கில் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறி வாழ்வதற்கு உதவும்படி பன்னாலை மற்றும தெல்லிப்பழைப் பகுதிகளைச் சேர்ந்த இரு குடும்பப் பெண்களால் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பாக மனித நேய அமைப்புக்களின் ஒன்றியமபோர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு மகஜர் ஒன்றை நேற்றுமுன்தினம் சமர்ப்பித்துள்ளது. பன்னாலை, பருத்தியோலை வீதியைச் சேர்ந்த திருமதி வை.காசிலிங்கம், தெல்லிப்பழை, வவுணாவத்தையைச் சேர்ந்த திருமதி சின்னத்தங்கம் ராஜரட்ணம் ஆகியோர் சார்பாகவே இந்த மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தப் பெண்கள் ஏற்கனவே பலாலி பாதுகாப்புப் படைத் தளபதிக்கு அனுப்பியுள்ள கடிதங்களைச் சுட்டிக்காட்டி கண்காணிப்புக் குழுவுக்குச் சமர்ப்பித்துள்ள மேற்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமது சொந்த இடங்களில் குடியேற அனுமதிக்குமாறு இவர்கள் இருவரும் விடுத்துள்ள கோரிக்கை நியாயமானது. தடைசெய்யப்பட்ட பகுதிகளுக்கு வெளியே இவர்களின் வீடுகள் அமைந்துள்ளன. கண்ணிவெடி அகற்றப்பட்ட - அகற்றப்படாத இடங்கள் முன்னரங்க நிலைகளை ஆதாரமாகக் கொண்டு நிர்ணயிக்கப்பட்டுள்ளன. முன்னரங்க நிலைகள் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. படைகள் பிரிக்கப்பட்டு விடுவார்கள் என்பது பொருத்தமற்ற வாதம்.

இந்த மகஜரின் பிரதிகள் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர், ஜனாதிபதி, புலிகள் இயக்கத் தலைவர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஓ-8)

### பாடசாலையில் திருட்டு!

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் கடந்த 23 ஆம் திகதி திருட்டு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வித்தியாலய அறை உடைக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நீரிறைக்கும் இயந்திரம் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (8-117)

# சகல துறைமுகங்களுக்கும் கடற்படையினரின் பாதுகாப்பு

கொழும்பு,மே26

நாட்டின் சகல துறைமுகங்களுக்கும் கடற்படையினரின் நேரடிப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் இந்த விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் உலகிலுள்ள சகல துறைமுகங்களும் அந்தந்த நாட்டுப் பாதுகாப்புப் படையினரின் நேரடிப் பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்ற சர்வதேச (ஐ.எஸ்.பி.எஸ்.) சட்டத்துக்கு அமையவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்புத் துறைமுகம் உட்பட இலங்கையின் பல துறைமுகங்களின் பாதுகாப்புத் தனியார் பாதுகாப்பு நிறுவனங்களிடமும், துறைமுக உள்ளகப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடமுமே இருந்து வந்தது.

கடந்த 23 ஆம் திகதி முதல் கடற்படையினரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் துறைமுகப் பாதுகாப்புப் பணிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. (ப)

### சுவர் விளம்பரம் கழிவு ஒயிலால் அழிப்பு

யாழ்ப்பாணம்,மே26

யாழ். நகரில் கஸ்தூரியார் வீதியில் சுவர் ஒன்றில் எழுதப்பட்டிருந்த மதுபான விளம்பரம் இரவு வேளை விஷமிகளால் கழிவு ஒயில் ஊற்றிச் சேதப்படுத்தப்பட்டது.

மதுபான விற்பனை நிலையச் சுவரில் படத்துடன் எழுதப்பட்டிருந்த 'பியர்'விளம்பரமே நேற்றுமுன்தினம் இரவு சேதப்படுத்தப்பட்டிருக்கிறது.



'ஆற்றலைத்தேடி' ஆயிரம் பெண்களுக்கான பயிற்சித் திட்டத்திற்கான நேர்முக அரங்காடல் 12.05.2004 அன்று பெண்கள் பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது. வழமைக்கு மாறான ஒரு நேர்முகமாக அடிமனதில் புதைந்திருக்கும் விருப்பை வெளிப்படுத்தி கதைக்கவும் மன இறுக்கத்தினைத் தளர்த்தவும், ஒரு நாள் முழுவதும் தாங்கள் தேர்வுக்குள்ளாக்கப்படுகின்றனர் என்ற எண்ணத்தை தளர்த்தவும் குழுச் செயற்பாடுகள் நடைபெற்றன. அந்த வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதரம்பரநாதனும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார். அங்கு எடுக்கப்பட்ட படம் இது.

# இத்தாலிக்குச் செல்லமுயன்ற சமயம் கைதான 50 இளைஞர்கள் விடுதலை

கொழும்பு,மே26

இத்தாலிக்குச் சட்டவிரோதமாகச் செல்ல முற்பட்டபோது கைது செய்யப்பட்ட 50 இளைஞர்கள் நீர்கொழும்பு மேலதிக நீதிவானால் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 16ஆம் திகதி 'ரோலர்'படகு ஒன்றில் சென்று கொண்டிருந்தபோது எகிப்து நாட்டுக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்த 50 இளைஞர்கள், கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதி விமானம் மூலம் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டனர்.

திருப்பி அனுப்பப்பட்ட இவர்கள் அனைவரும் ரகசியப் பொலீஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இவர்களின் வழக்குகள் நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி இந்திரா பீரிஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

இளைஞர்கள் சட்டவிரோதமாகச் செல்வதற்கு முகவர்களே சூத்திரதாரிகள் என்றும் - ஒவ்வொருவரும் தலா 50 ஆயிரம் ரூபாவீதம் கொடுத்தே இப்படி ஏமாற்றப்பட்டுள்ளனர் என்றும்- சட்டத்தரணிகள் தெரிவித்தனர். இதற்கு நீர்கொழும்பைச் சேர்ந்த மனுவேல் மற்றும் ரோம்லஸ் என்ற நபர்களே காரணமென சட்டத்தரணிகளால் நீதிவானிடம் சுட்டிக்காட்டப்பட்டது. இதனை அடுத்து 50 இளைஞர்களும் விடுவிக்கப்பட்டனர். (க)

# சனியன்று கைலாசபதி அரங்கில் பிரபல 'றிச்சுவல்' நாடகம்

யாழ்ப்பாணம்,மே26

கொழும்பு சென்ரர் ஸ்டேஜ் தயாரிப்பாளர்களின் (**Centre Stage Productions**) பிரபல 'றிச்சுவல்' (சடங்கு) என்னும் ஆங்கில நாடகம் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவிருக்கின்றது.

பிரபல தென்னிலங்கை ஆங்கில நாடக எழுத்தாளர் ஜெகான் அலோசியஸ் இந்த நாடகத்தை எழுதி இயக்கியுள்ளார்.

இந்த நாடகம் ஏற்கனவே, பிரிட்டிஷ கவுன்ஸிலிலும் பேராதனைப பல்கலைககழகத்திலும் மற்றும் இந்தியாவின் பெங்களூரிலும் மேடையேற்றப்பட்டு பாராட்டுக்களைப்பெற்றுள்ளது.

தயாரிப்பாளர் ஜெகான் அலோசியஸினால் 2001 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த நாடகக்குழுவில் அமெச்சூர் நாடகக் கலைஞர்கள் இடம்பிடித்துள்ளனர்.

இளைஞர்களின் நாடகத்துறை ஆற்றலை வளர்க்க உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ள இந்த நாடகம் எழுதுதல், நடித்தல், இயக்குதல், தயாரித்தல் போன்ற அம்சங்களில் ஆர்வலர்களுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும்.

இந்நாடகத்தில் வரும் பாத்திரங்களில் கருணாவதி, ஆரியவதி, கலானி, சுஜீவா மற்றும் சந்திரசேகர ஆகிய கலைஞர்கள் பங்கேற்கிறார்கள். பிரவேசம் இலவசம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ப)



'றிச்சுவல்' (The Ritual) நாடகத்தில் வரும் இரண்டு காட்சிகளைப் படங்களில் காணலாம்.

# அரும்பொருள்களைப் பேணுவதற்கு தொல்பொருள் காட்சிச்சாலை

## இணுவிலில் அமைக்கப்படுகிறது

வலி.தெற்கு,மே26

இணுவில் கிராமத்தில் தொல்பொருள் காட்சிச்சாலை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இணுவில் கிராமத்தில் வாழ்ந்த பல பெரியார்களுடைய வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் பல புத்தகங்கள் இங்கு பாதுகாத்து வைக்கப்படவுள்ளன.

அத்துடன், யாழ்ப்பாண மாவட்ட வரலாற்றுச் சிறப்புப் பெற்ற பல்வேறு அம்சங்களான சிற்பம், சித்திரம் தொடர்பான நூல்களும் கலைவடிவங்களும் பேணிப் பாதுகாக்கப்படவுள்ளன.

ஏட்டுச் சுவடியிலான கந்தபுராணம், நூறு வருடங்களுக்கு முன்னர் பயன்டுத்தப்பட்ட கூடார வண்டில் போன்றவை இப்பகுதியில் உள்ள தனியார்களிடம் இருக்கின்றன. அவையெல்லாம் பெறப்பட்டு இங்கு பாதுகாப்பாக வைக்கப்படும்.

இணுவில் கந்தசுவாமி கோயில் முன்றிலில் உருவாக்கப்பட்டு வரும் இந்தத் தொல்பொருள் காட்சிச்சாலை விரைவில் செயற்படவுள்ளதாகவும், அது செயற்பட ஆரம்பித்ததும் யாழ். குடாநாட்டிலுள்ள பாடசாலை வரலாற்றுப் பாட மாணவர்களுக்கும், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பேரறிஞர் போன்ற பலருக்கும் பயனுள்ள நிலையமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (8-152)

# சாவகச்சேரி பாதுகாப்பு வலயத்துக்குள் 5முஸ்லிம் குடும்பங்கள் மீள்குடியமர்வு

தென்மராட்சி,மே26

சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் படையினரின் அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருந்த வீடுகளில் ஐந்து முஸ்லிம் குடும்பங்கள் மீளக்குடியமர்ந்தனர்.

சாவகச்சேரி மொகிதீன் ஜும்மா பள்ளிவாசலுக்குச் சொந்தமான இக்காணியிலுள்ள வீடுகளிலேயே முஸ்லிம் குடும்பங்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குடியிருப்புப் பகுதி படையினரின் மிதிவெடி அகற்றும் பிரிவினரால பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் நேற்றுமுன்தினம் பிரதேச செயலக ஆளணி உத்தியோகத்தர் கபால சுப்பிரமணியம் முன்னிலையில் படையினரால் இந்த வீடுகள் கையளிக்கப்பட்டன.

இந்த வீடுகளில் குடியமர்வதற்கு கடந்த மாதம் சாவகச்சேரிக்கு வந்த ஐந்து குடும்பங்களும் நேற்று வரை பள்ளிவாசல் கட்டடத்தில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-117)

# புரட்சிகரமான துறவற வாழ்வை மேற்கொண்ட பிலிப்பு நேரியார்

புனித பிலிப்பு நேரியாரின் வருடாந்த உற்சவம் இன்று 26ஆம் திகதி புதன்கிழமை கொண்டாடப்படுகிறது. அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

**பு**னித பிலிப்பு நேரியாரின் அழியாத திருச்சரீரம் உரோமாபுரியில் உள்ள "கியேசா நோவா" என்னும் தேவாலயத்தில் பக்தர்களின் வணக்க வழிபாட்டிற்கு வைக்கப்பட்டிருக்கிறது.

செல்வச் சிறப்புமிக்க குடும்பத்தைச் சேர்ந்த இப்புனிதர் தமது இளம் வயதிலேயே மிகவும் புரட்சிகரமான துறவற வாழ்வை ஆரம்பித்து விட்டார். கூடுதலான நேரத்தைப் பகலிலும் இரவிலும் செபதியானத்தில் செலவிடுவார். பிரதான ஏழு கோயில்களை அடிக்கடி தரிசிப்பார். விசேடமாக மரணப்படுக்கையில் இருபபவர்களை அடிக்கடி தரிசித்து, அவாகளுக்கு வேண்டிய ஆன்மசரீரப் பணிகளைச் செய்தார்.

விசேடமாக கஷ்டப்படும் ஏழை நோயாளிகளுக்கென தேவதிரித்துவத்தின் நாமம் கொண்ட ஒரு வைத்தியசாலையையும் ஸ்தாபித்தார்.

இவைகள் எல்லாவற்றுக்கும் மேலாக, "தியானப் பிரசங்கியார்" என்னும் கத்தோலிக்க வேதம் பரப்பும் சபையை உண்டாக்கினார். இந்த சபைக் குருக்கள் இந்தியாவில் உள்ள கோவா மாநிலத்தில் உள்ளனர். இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன்பு இந்த சபையை சேர்ந்த குருக்கள் இலங்கையில் முதல்முதலாக கத்தோலிக்க மதத்தை பரப்ப ஆரம்பிதனர். இவர்களில் முத்திப் பேறுபெற்ற யோசேவாஸ முனிவரும யாக்கோமே கொன்சால்வெஸ் சுவாமிகளும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் வேதம் போதித்த தமிழ்பேசும் மக்கள் இருந்த பின்வரும் இடங்களில் புனித பிலிப்பு நேரியாரின் பெயர் கொண்ட கோவில்களைக் கட்டினார்கள்.

யாழ்.மாவட்டத்தில் செம்பியன் பற்று, இளவாலை, அல்லைப்பிட்டி, கொழும்பில் புறக்கோட்டை, நீர்கொழும்பில் தோப்பு கொச்சிக்கடை, தம்பிற்று மன்னார் மாவட்டத்தில் ஆத்திக்குளி, நானாட்டன், தோட்டவெளி, ஸ்மாலைத்தாழ்வு, முருங்கன் ஆகிய இடங்களில் கோயில்கள் உள்ளன.

சி.பி.சேனராயர்

புனித பிலிப்புநேரியார் தனது புரட்சிகரமான துறவற வாழ்வில் கடைப்பிடித்த கடின உபவாசம் கண் விழித்து செபத் தியானம் செய்தல், நோயாளிகளுக்கும் ஏழைகளுக்கும் புரிந்த அளப்பரிய சேவை ஆகியவற்றின் பெறுபேறாக இறைவன் புனித பிலிப்புநேரியாரின் சரீரத்தை 409 வருடங்களாக அழியாமல் வைத்து அநேக அற்புதங்கள் புரியும் வரத்தையும் அவருக்கு அருளியுள்ளார்.

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு
## பிற்போடப்பட்டுள்ளது

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத்தின் வளர்ச்சி நிதிக்காக இன்று (26.05.2004) புதன்கிழமை அதிஷ்டம் பார்க்கப் படவிருந்த சீட்டிழுப்பு எதிர்வரும் 11.06.2004 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

(32330)(11-16) -யாழ்.பல்கலைக்கழக தமிழ் மன்றம்.

## தேசிய ஆங்கில டிப்ளோமா பாடநெறி பற்றிய SAAMSTECH இன் முக்கிய அறிவித்தல்

கடந்த ஆறு மாதங்களிற்கு மேலாக எமது தேசிய ஆங்கில டிப்ளோமா பாடநெறியினைத் தொடரும் மாணவர்களுக்காக அனுப்பப்படும் பாடநெறிப் புத்தகங்கள் வவுனியா தபாலகத்தில் தேங்கி இருப்பதாலும், சேதமடைந்த நிலையில் சென்றடைவதாலும் பாடநெறிப் புத்தகங்கள் திரும்பவும் 31.05.2004 முதல் எமது யாழ். அலுவலகத்தில் இருந்து அனுப்பப்படவுள்ளது. பாடநெறிகளைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்களிற்கான புத்தகங்கள் அனைத்தும் அனுப்பி வைக்கப்படும்.

Director
**Psalm Institute of Engineering and Technology**
22-¼, Galle Road, Dehiwala.
(சி-35205)(24-11-16) **011-5559222.**

## II கருத்தரங்கு

பெண்களின் உடல்நலம் சம்பந்தமான கலந்துரையாடல்

இடம்: TRRO கேட்போர்கூடம், 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
காலம்: 27-05-2004 (வியாழக்கிழமை)
நேரம்: காலை 10.30 மணி (புதியநேரம்)
கருத்துரை வழங்குபவர் Dr.G.பவானி (மகப்பேற்று வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை)
உள்ளடக்கம்: பெண்களுடைய உடல்நலம் சம்பந்தமான பிரச்சினைகள், தீர்வுக்கான வழிகள்.
குறிப்பு: ※ ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்றலாம்.
※ உங்கள் பிரச்சினைகளைக் கலந்துரையாடலுக்கு முன் எமக்கு எழுத்து மூலம் அனுப்பிவைக்கலாம்.

பெண்கள் அபிவிருத்தித் திட்டம்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106,4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(சி-35200)(11-16)

## சமய சந்நிதிகளில்

வலி.தெற்கு,மே26
சுன்னாகம் மயிலணி ஸ்ரீசுப்பிரமணியப் பெருமான் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 31 ஆம் திகதி முற்பகல் 11.45 மணிக்கு நடைபெறவுள்ளது. (10-ரி-152)

★ ★ ★

புங்குடுதீவு, பெருங்காடு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 24 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.
எதிர்வரும் 2 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (10-ரி)

★ ★ ★

குடத்தனை, மே26
துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.
எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (10-ரி.78)

## பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பு

இணுவில் சைவத்திருநெறிக் கழக பாலர் பாடசாலை ஏற்பாட்டில் நடைபெற்ற 'சீர் இணுவைத்திருவூர்' நூல் வெளியீட்டு விழாவில் நூலின் தொகுப்பாசிரியர் மூ.சிவலிங்கத்துக்கு ஆலோசனைகளும் ஆதரவும் ஊக்கமும் வழங்கிய முதுபெரும் புலவர் இணுவில் வை.க.சிற்றம்பலம், கவிஞர் ச.வே. பஞ்சாட்சரம், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டனர்.
இந்நிகழ்வில் கலாநிதி சபா. ஜெயராசா இவர்களுக்கான பொன்னாடைகளை போர்த்துக் கௌரவித்தார். (8-152)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி, இன்று புதன்கிழமை பி.ப. 2.30 மணிக்கு அதிபர் மா.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்விப பணிப்பாளர் சி.செல்லையா கலந்து கொள்ளவுள்ளார் (10)

## ஆசிரியர் தேவை

எமது சிவசக்தி முன்பள்ளிக்கு பயிற்சி பெற்ற ஆசிரியர் தேவை. சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.
28.05.2004 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி - 4 மணி.
29.05.2004 சனிக்கிழமை காலை 8 மணி - 10 மணி.
தொடர்புகளுக்கு:
S.தெட்சணாமூர்த்தி (ஆசிரியர்)
சிவசக்தி பாலர் பாடசாலை,
மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.
(32325)

## துயர் பகிர்கின்றோம்

எமது திணைக்களத் தலைவரும் மாவட்டப் புள்ளி விபரவியலாளருமாகிய திரு.கிளிவேட் வில்லியம்ராஜா அவர்களின் அன்புத் தந்தையார்

### சவரிமுத்து கிறிஸ்தோப்பர்

அவர்கள் காலமாகியதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து துயர்பகிர்ந்து கொள்வதோடு, ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

(32324)(11-16) புள்ளி விபரக்கிளை, கச்சேரி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்
திருமதி L.M. இரஞ்சிதம் அவர்களின்
அன்புத் தந்தையார்

### சவரிமுத்து கிறிஸ்தோப்பர்

அவர்கள் 25.05.2004 அன்று காலமாகியதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.போதனா வைத்தியசாலை
தாதிய உத்தியோகத்தர் நலன்புரி கூ.ச., யாழ்ப்பாணம். (32326)(43)

## மரண அறிவித்தல்கள்

திருமதி
### செல்வரத்தினம் கந்தசாமி

சந்தை வீதி, உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி செல்வரத்தினம் கந்தசாமி 25.05.2004 செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்தினார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2004) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சந்தை வீதி,*
*உடுப்பிட்டி.* (32316)(38)
தகவல்: க.திரவியம் *(மகன்)*

### அன்ரன் சாள்ஸ் அருளானந்தம்
(ஆசிரியர்)

யாழ்ப்பாணம், கதீற்றல் வீதியைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் சாள்ஸ் அருளானந்தம் 23.05.2004 ஞாயிறன்று ஆஸ்திரேலியாவில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற A.S. அருளானந்தம் J.P. (ஆசிரியர்) - கத்தறீன ஞானம்மா ஆகியோரின் பாசமிகு மூத்த மகனும், ஈடித்தின் அன்புக் கணவரும், அல்பிரட் (கனடா), அஞ்சலோ (ஆஸ்திரேலியா), ஏட்றியன் (ஆஸ்திரேலியா), அலெக்ஸ் (லண்டன்), அனிக்கிலிற் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற பற்றீசியா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாளினி (கனடா), சறோ (லண்டன்), ஏட்றியன் சாந்தி, அனிக்கிலிற் சாந்தி (ஆஸ்திரேலியா), அரியம் (கோப்பாய்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, ஏரோணி, மேரிப்பிள்ளை, றோசலின் ஆகியோரின் மருமகனும், பொன்மலர், சின்னமலர், அல்போண்ஸ், சின்னராசா, தங்கம், யூட் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், இராசாத்தியம்மாவின் மருமகனும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை (ஐயா), சூசைப்பிள்ளை துரைசிங்கம் (ஆசிரியர்), யே.சின்னத்துரை ஆகியோரின் பெறாமகனுமாவார்.
அன்னாரின் பூதவுடல் நாளை (27.05.2004) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ஆஸ்திரேலியாவில் நல்லடக்கம் செய்யப்படும்.
இவரின் ஆன்ம சாந்திக்காக நாளை (27.05.2004) வியாழக்கிழமை காலை 6.30 (பு.நே) மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புகொடுக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

*இல.79, கதீற்றல் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (32322)(38)
தகவல்: அல்போண்ஸ் (மைத்துனர்)

### முத்துச்சாமி பத்மநாதன்
(றிக்கோ ஹோட்டல் உரிமையாளர்)



சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துச்சாமி பத்மநாதன் 20.05.2004 வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற முத்துச்சாமி - சோதியம்மா ஆகியோரின் மூத்த மகனும் காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் கனகாம்பிகை ஆகியோரின் அன்பு மருமகனும் யசோதர விலாசினியின் அன்புக் கணவரும் தாட்சாயினி (லண்டன்), செந்தூரன் (சவூதி), ராகவேந்திரா (பரியோவான் கல்லூரி, மாணவன்) ஆகியோரின் பாசமிகு அப்பாவும் Dr.ஜெயக்குமாரின் (Oxford, லண்டன்) மாமனாரும் கனகேஸ்வரி, விமலநாதன், செல்வநாதன் (லண்டன்), தனலட்சுமி (லண்டன்), கமலநாதன் (அபீஸ் கோப்பி), கோணேஸ்வரநாதன் (கனடா), புவனேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு அண்ணாவும் சிவபாதம் (இருபாலை), சந்திரமதி, புவனேஸ்வரி (லண்டன்), சபாநாதன் (லண்டன்), கலாதேவி, கலாஜோதி (கனடா), சிவச்சந்திரன் (லண்டன்), உருத்திரவிலாசினி (லண்டன்) துவாரகாவிலாசினி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் செல்வரட்ணம் (லண்டன்), ராஜேந்திரம் (ஜேர்மனி) ஆகியோரின் சகலனும் தனுசியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, மாணவி), சோபி (லண்டன்), சேரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ராஜேஸ்கண்ணா (சிலிங்கோ காப்புறுதி, கொழும்பு), நிருஜிதா, விஜிக்கிருஸ்ணா (பரியோவான் கல்லூரி, மாணவன்), அபிசங்கர், ஜீவசங்கர் (பரியோவான் கல்லூரி, மாணவா), பிரியங்கா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), அஞ்சனா, அருண்மைந்தன் (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும் துஸ்யந்தன் (ஜேர்மனி), கிருசாந்தி (லண்டன்), பிரசாந்தி (லண்டன்), தாரணி, உமையாள், அவந்திகா (ஜேர்மனி) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2004) புதன்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*'செந்தாமரை'*
*22/3A, விதானையார் வீதி,*
*சுண்டுக்குளி.* (35192)(11-16)
தகவல்: திருமதி ய.பத்மநாதன் (மனைவி), ராகவேந்திரா (மகன்).

## கிறிஸ்த சேவ ஆச்சிரமம்
## மருதனார்மடம், சுன்னாகம்
## பரிசுத்த ஆவியரின் திருவிழா

பரிசுத்த ஆவியரின் பெருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் (29.05.2004) சனிக்கிழமை முழுநாள் நிகழ்வாக பெந்தேகொஸ்தே விழா நடைபெறும்.

காலை 7.30 திருவிருந்து வழிபாடு (அருட்திரு. S.C.ஆர்னல்ட்)
காலை 9.00 காலை உணவு
கர்லை 9.30 விவிலிய ஆய்வு 'திருவிவிலியத்தில் பரிசுத்த ஆவியின் பணிகள்' - (அருட்திரு. T.தேவநேசன்)
காலை 11.00 தேநீர் இடைவேளை
காலை 11.30 அமைதித்தியானம்
மதியம் 12.00 மன்றாட்டு
பிற்பகல் 12.30 மதிய உணவு
பிற்பகல் 2.00 அமைதிநேரம்
பிற்பகல் 2.30 'ஆச்சிரம வாழ்வும், ஆன்மிகமும்' மக்கள் கருத்துகளுக்கான நேரம்
பிற்பகல் 3.30 தேநீர் இடைவேளை
மாலை 4.00 மறையுரை 'பரிசுத்த ஆவியில் ஆவிக்குரிய வாழ்வு' (அருட்கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம்)
மாலை 5.30 நிறைவு

★ பரிசுத்த ஆவியரின் வழிநடத்துதலுக்காகக் காத்திருந்து செபிக்க அருமையான சந்தர்ப்பம்.
★ யாவரும் வருக அனுமதி இலவசம்.

(32328)(11-16) -பரிபாலன சபை.

# இந்திய மீனவர் குழு இரண்டு தினங்கள் கொழும்பில் தங்கியிருந்து பேச்சு நடத்தும்

யாழ்ப்பாணம்,மே26

இலங்கை வந்துள்ள இந்திய மீனவர்கள் குழு இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினைகள் தொடர்பாக நாளை வியாழக்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் கொழும்பில் உள்ள 'செடாக்' நிறுவனக் கட்டடத்தில் வைத்து இலங்கை மீனவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், மன்னார், நீர்கொழும்பு மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் பிரதிநிதிகள், இந்தியத் தூதரக அதிகாரிகள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்வார்கள். யாழ். மாவட்ட மீனவர் கூட்டறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தைச் சேர்ந்த 10 பிரதிநிதிகளும் கடற்றொழில் திணைகள அதிகாரிகள் இருவரும் கலந்துரையாடலில் கலந்துகொள்ளவென இன்று புதன்கிழமை காலை கொழும்பு புறப்பட்டுச் செல்கிறார்கள்.

இதேவேளை -

நேற்றுமுன்தினம் மன்னார் வாழ்வோதயத்தில் இந்திய மீனவர் குழுவினருக்கும் மன்னார் மாவட்ட மீனவர்களுக்குமிடையே கலந்துரையாடல் இடம்பெற்றது. காலை 10 மணி முதல பிற்பகல் 2 மணிவரை நடைபெற்ற கலந்துரையாடலுக்கு வாழ்வோதயம் இயக்குநர் அருட்திரு.எஸ்.யேசுராசா அடிகளார் தலைமை வகித்தார்.

முடிவில் மன்னார் மாவட்ட மீனவ்கள் இந்திய மீனவர்களுக்கு விருந்து அளித்துக் கௌரவித்தனர். (ஐ-173)

# சாண்டோ ஸ்ரீதாஸ் காலமானார்

காத்தான்குடி,மே26

"உலக இரும்பரசன்" எனப் போற்றப்பட்ட சாண்டோ ஸ்ரீதாஸ் நேற்றுக்காலை கொழும்பில் தனியார் மருத்துவமனையொன்றில் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 57.

மட்டக்களப்பு ஆரையம்பதியில் பிறந்த ஸ்ரீதாஸ் இறக்கும் வரை மட்டக்களப்பில் வசித்து வந்தார். மூன்று பிள்ளைகளின் தந்தையான ஸ்ரீதாஸ் இலங்கையில் கொழும்பு, கண்டி உட்பட பல இடங்களில் 60 இற்கும் மேற்பட்ட மயிர்க்கூச்செறியும் சாதனைகளைப் படைத்துள்ளார்.

தனது 54 ஆவது வயதில் 54 ஓடும் உழவு இயந்திரங்களை 10 நிமிடங்களுக்குள் தனது மார்பில் ஏற்றி அரிய சாதனைகளை நிகழ்த்தினார். ஓடும் காரை இழுத்து நிறுத்தல், யானையை நெஞ்சின் மேல் ஏற்றி வைத்தல், இரும்புக் கம்பிகளை மூக்காலும், பற்களாலும் வளைத்தல் உட்பட 60 இற்கும் அதிகமான மயிர்க்கூச்செறியும் சாதனைகளைப் படைத்துள்ளார். மறைந்த உலக இரும்பு மனிதன் பேராசிரியர் சாண்டோ சங்கரதாஸின் ஒரே சீடரான ஸ்ரீதாஸ், தமது குருவுக்கு நினைவு மண்டபம் அமைக்கவேண்டுமென்பதில மிகவும் அக்கறையுடன் செயற்பட்டவர்.

2003 ஆம் ஆண்டு இலங்கை கலாசார அமைச்சின் 'கலாபூஷண' விருது பெற்ற இவர், 25 இற்கும் அதிகமான பட்டங்களைப் பெற்றுள்ளார். "இரும்பு மனிதர்", "சிங்கக்குருளை", "வீரதீரதிலகம்", "மனிதமலை", "வீரச்சிங்கம்" என்பன அவற்றுள் சிலவாகும்.

# வலி.மேற்குப் பிரதேச சபைக்கு விரைவில் உழவு இயந்திரம்

வலி.மேற்கு,மே26

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் சுத்திகரிப்புப் பணிகளுக்கு 'நிக்கொட்' நிறுவனத்தின் மூலம் உழவு இயந்திரம் ஒன்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கு வலிமேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில குப்பைகளை அகற்றுவதற்கு பிரதேச சபையிடம் உழவு இயந்திரம் இல்லை. இதனால், இந்தப் பிரதேசத்திலுள்ள சகல வீதிகளிலும், பொது இடங்களிலும் குப்பைகள் தேங்கிக் கிடக்கின்றன. இதனால், சுகாதர சீர்கேடு நிலவுவதுடன் தொற்று நோய்களும் ஏற்படும் நிலைமையும் தோன்றியுள்ளது.

எனவே, பிரதேச சபைக்கு உழவு இயந்திரம் ஒன்று அவசியம் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு பிரதேச செயலர் மிகவிரைவில் 'நிக்கொட்' நிறுவனத்தின் மூலம் உழவு இயந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார். (8-175)

## உழவு இயந்திரத்திலிருந்து தவறி வீழ்ந்தவர் படுகாயம்!

வடமராட்சி,மே26

விறகு ஏற்றிவந்த உழவு இயந்திரத்தில் விறகுக்கு மேல் அமர்ந்திருந்து பயணம் செய்தவர், வீதிக்குக் குறுக்கே நின்ற மரக்கிளையில் மோதி விழுந்ததில் தலையில் படுகாயமடைந்தார். இவர், மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கரணவாய் கல்லுவத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கரணவாய் மேற்கைச் சேர்ந்த எஸ்.தர்மராசா (வயது 44) என்பவரே படுகாயமடைந்தவராவார். (ஐ-173)

# யாழ்.தாதிகள் மூன்றுபேருக்கு பரீட்சையில் முதலிடங்கள்

யாழ்ப்பாணம்,மே26

2001 ஆம் ஆண்டுக்கான தாதிமார் பயிற்சி நெறியின் இறுதிப் பரீட்சைகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தாதிமார் மூவர் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளனர்.

இதில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இயங்கும் தாதிமார் பயிற்சிப் பாடசாலையைச் சேர்ந்த மாணவிகளான எம்.தனசீலா முதலாம் இடத்தையும், எஸ்.செல்வரூபி 2 ஆம் இடத்தையும், ஏ.திருஷாந்தி 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

யாழ்.தாதிமார் பயிற்சிப் பாடசாலையிலிருந்து 36 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். அவர்கள் அனைவரும் சித்தியடைந்துள்ளனர்.

அகில இலங்கை ரீதியாகவுள்ள 12 தாதிமார் பயிற்சிப் பாடசாலைகளைச் சேர்ந்தோர் இந்தப் பரீட்சையில் தோற்றியிருந்தனர். (ஐ-ரி)

# வலிகாமம் தென்மேற்குப் பகுதியில் வைகாசிப்போக வெங்காயச்செய்கை

வலிதென்மேற்கு,மே26

வலி.தென்மேற்குப் பகுதியில் விவசாயிகள் வைகாசிப்போக வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுவருகின்றனர். இந்தப் பகுதியில் அண்மையில் பெய்த மழையையடுத்து தங்கள் வயற்காணிகளைப் பண்படுத்தி, அதில் வெங்காயத்தைப் பயிரிட்டுவருகின்றனர். இதேவேளை, இந்தப் பகுதியில விதைவெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது. 50 கிலோ நிறையுள்ள வெங்காயம் ஆயிரத்து 500 ரூபா வரை அதிகரித்துள்ளது. இம்முறை வைகாசிப்போக வெங்காயச் செய்கையில் விவசாயிகள் பெரும் எண்ணிக்கையில் ஈடுபட ஆரம்பித்துள்ளதால் இந்த விலையேற்றம் ஏற்பட்டுள்ளது. அத்துடன், இங்கிருந்து விதை வெங்காயம் வன்னிப் பிரதேசத்திற்கும் கொள்வனவு செய்து எடுத்துச் செல்லப்பட்டு வருகின்றது. (ஐ-28)



அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் 95 லட்சம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ள புதிய கட்டடத்தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் சி.விமலேந்திரன் அடிக்கல் நடுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்.)*

# கிராமங்களின் வரலாறுகள் ஆவணப்படுத்தப்பட வேண்டும்!

## வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில் வேண்டுகோள்

கிராமங்கள் பற்றிய வரலாறுகளை எழுத்துமூலமாக ஆவணப்படுத்தவேண்டும் என்ற அவா இன்று அறிஞர்கள், ஆய்வாளர்கள் மத்தியில் முகிழ்ந்தெழத் தொடங்கியுள்ளது. நெடுந்தீவு கிராமம் பற்றிய வரலாற்று நூல் அண்மையில் எழுதப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இன்று இணுவில் கிராமம் பற்றிய இந்த அகல்விதி நூல் வெளியிடப்படுவது பாராட்டுக்குரியது.

'சீர் இணுவைத் திருவூர்' என்ற இணுவில் கிராம வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில் நூலின் பன்முகப் பரிமாணங்கள் பற்றி எடுத்துரைத்த இராமநாதன் நுண்கலைப்பீட பேராசிரியர் கலாநிதி சபா ஜெயராசா மேற்கண்டவாறு கூறினார்.

இணுவில் சைவத்திருநெறிக்கழக அறநெறிப் பாடசாலையின் ஏழாவது ஆண்டு நிறைவுவிழாவையொட்டி கிராம சேவையாளர் மூ.சிவலிங்கம் தொகுத்த மேற்படி நூலின் வெளியீடு இணுவில் சிவகாமி அம்மன் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெற்றது.

சைவத்திருநெறிக் கழகத் தலைவர் கெ.தவராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் இணுவில் சிவகாமி அம்மன் தேவஸ்தான பிரதான சிவாச்சாரியார் சிவஸ்ரீ. சாம்பசிவ சோமசபேசக் குருக்கள், இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

கலாநிதி சபா.ஜெயராசா தமது உரையில் கூறியதாவது:-

உலகம் இன்று பூகோள மயமாகிக்கொண்டிருக்கின்றது. கிராமங்கள், மொழிகள், சமயங்கள், தேசங்கள் பற்றியெல்லாம் எண்ணுவது பொருத்தமற்றது எனச் சிலர் எண்ணிக்கொண்டிருக்கையில், கல்வி, இசை, நடனம், கிராமிய இலக்கியம் போன்ற பாரம்பரியங்களையும், இக்கிராமத்தில் வாழ்ந்த பெரியார்கள், அறிஞர்கள் மற்றும் சிறப்புக்களையெல்லாம் தேடித் தொகுத்து அவற்றை வரலாறுப் பதிப்புகளாக்கி இருப்பது பாராட்டப்படவேண்டியது. ஏனைய நூல்களில் காணப்படாத சிறப்பம்சமாக இக்கிராமத்துப் பெண்கள்பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது - என்றார்.

விழாவில் தொடக்கவுரையாற்றிய 'செஞ்சொற்செல்வர்' ஆறு.திருமுருகன் கூறியதாவது:-

ஆலயங்கள், கலைகள் பற்றி எல்லாம் பல்கலைக்கழகத்தினரால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளுக்கு உரிய தகவல்களை எம்மால் வழங்க முடியாதிருப்பதற்கு காரணம் அவற்றைப் பற்றிய ஆவண நூல்கள் இல்லாதிருப்பதே. அக்குறையை இந்த நூல் ஓரளவு நீக்கியுள்ளது.

வரலாற்று நூல்கள் எழுதுவதற்கு அனுபவஞானம், துணிவு, பதில் கூறக்கூடிய திறமை இருக்கவேண்டும். இந்த நூலில் பல பிழைகள் சுட்டிக்காட்டப்படலாம். இந்த நூலை அடிப்படையாக வைத்துப் பிழைகள் திருத்தப்பட்டு அடுத்த தலைமுறை புத்தகம் எழுதவேண்டும். வெளிநாட்டில் வாழும் இணுவில் கிராம மக்கள் தமது பிள்ளைகளுக்கு அதன் சிறப்பைத் தெரியப்படுத்த இதுபோன்ற நூல்களை ஆங்கிலத்தில் அச்சிட ஆவலாக உள்ளனர் - என்றார்.

வாழ்த்துரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா, வாய்மொழியாகத் தெரிந்துவந்த விடயங்கள் எழுத்துருவாக்கப்பட்டால்தான் அடுத்த சந்ததி அதனைப் படித்துத் தெளிவுபெறும். இன்று வெளியிடப்படும் இந்த நூல் எதிர்கால சந்ததிக்குப் பயனளிப்பதோடு, இதுபோன்ற பல நூல்கள் வெளியிடப்படவேண்டும் - என்றார்.

கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா நூலை வெளியிட்டு உரையாற்றினார். கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நூல் ஆய்வுரை நிகழ்த்தினார். (ஐ-152)

## இணுவிலில் உருவப் படங்கள் திரை நீக்கம்

இணுவில் சைவத்திருநெறிக் கழக அறநெறிப் பாடசாலையின் ஏழாம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சிகளின்போது இணுவில் கிராமத்தில் நற்பணிகள் ஆற்றிப் பெருமை தேடித்தந்த அறிஞர்கள், கலைஞர்கள், கல்விமான்கள் பலரின் திருவுருவப் படங்கள் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டன. சைவத் திருநெறிக் கழகத் தலைவர் கெ.தவராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஊருவப்படங்களைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

மூதறிஞர் சபா. ஆனந்தர், தியாகராச சுவாமிகள், பெரிய சன்னியாசியார், வடிவேல்சுவாமிகள், சாத்திரம்மா, பண்டிதர் திருநாவுக்கரசு ஆகியோரின் படங்களே திரைநீக்கம் செய்யப்பட்டன. (ஐ-152)

## வல்லை சிதம்பராவில் மாடிக் கட்டடத் திறப்பு விழா

வடமராட்சி,மே26

வல்வெட்டித்துறை சிதம்பராக் கலலூரியில் 'நிக்கொட்' நிறுவனத்தின் உதவியுடன் கட்டி முடிக்கப்பட்ட புதிய மாடிக் கட்டடத் திறப்பு விழா, நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் ந.அரியரத்தினம் தலைமையில் நடைபெறும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவித் தலைவர் லீக்குன்ஜின் இப்புதிய மாடிக் கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண, வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள். (ஐ-173)

# காச நோயாளர் விடுதியை நிறுவ ஊர்காவற்றுறை மக்கள் எதிர்ப்பு

ஊர்காவற்றுறை,மே26

கோப்பாய் சுற்றயல்கூறு மருத்துவமனையில் தற்பொழுது இயங்கிவரும் காசநோயாளர் பெண்கள் சிகிச்சை விடுதி, ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக பொதுமக்கள் அடையாள மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பெண்கள், ஆண்கள் வயோதிபர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் இந்த மறியலில் ஈடுபட்டனர். காலை 9 மணிக்கு ஆரம்பமான இப்போராட்டம் நண்பகல் வரை நீடித்தது.

இந்த விடயம் தொடர்பாக ஊர்காவற்றுறையிலுள்ள பல்வேறு பொது அமைப்புக்கள் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர், ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய அதிகாரி, பிரதி சுகாதார சேவைப்பணிப்பாளர் ஆகியோருக்கு மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில், இந்த வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன. அவற்றை நிவர்த்தி செய்ய சுகாதார சேவைகள் திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்நிலையில் காசநோய் சிகிச்சைப் பிரிவை மட்டும் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கு ஆர்வம் காட்டுகிறது.

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் காசநோய் சிகிச்சைப் பிரிவிற்கென ஒதுக்கப்பட்ட வார்ட்டுகளுக்கு அருகில் இதர நோயாளர் வார்ட்டுக்கள் உள்ளன. வைத்தியசாலை சமையற்கூடம், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மகப்பேற்று நிலையம் ஆகியனவும் அருகில் அமைந்துள்ளன. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல், இந்த அடையாள மறியற்போராட்டம் மேலும் விஸ்தரிக்கப்படும் என்றார்கள். (8-16)

## தனியார் கல்வி நிறுவன விளம்பரப் பலகை விஷமிகளால் தீக்கிரை!

யாழ்ப்பாணம்,மே26

சித்தன்கேணியிலுள்ள பிரபல தனியார் கல்வி நிறுவனத்தின் பெறுமதிவாய்ந்த விளம்பரப் பலகைகள் விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 2 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதிகாலைவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் குழுவொன்றே இந்த விஷமச் செயல்களில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சத்தம் கேட்டு அயலவர்கள் விழித்துக் கொண்டதும் விஷமிகள் தப்பியோடிவிட்டனர்.


முன்னரும் இரு தடவைகள் இந்தக் கல்வி நிறுவனத்தின் விளம்பரப் பலகை தீக்கிரையாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக நிறுவனத்தின் இயக்குநர், சங்கானையிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பணிமனையில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார். (ஐ-8-ரி)

## 2ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில் 08 05 1944

ஆண்டவன் அடியில் 06 05 2004



## அமரர் சோமநாதன் தினகரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.05.2004) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் எம்முடன் இணைந்து கொள்ள தங்கள் குடும்பசகிதமாக எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

94. சிவன் வடக்கு வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(32321)

---


## ASIAN COMPUTERS

மெகா கணனி புலமைப்பரிசில்

**முக்கிய அறிவித்தல்**

6-6-2004 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த இலவச கணனி புலமைப்பரிசில் பரீட்சை 'மாணவர் தினம்' காரணமாக 5-6-2004 சனிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் நடைபெறும். இதுவரை இலவச அனுமதிகளை பெற்றவர்கள் உடன் எமது யாழ் நகர், சுண்ணாகம் மற்றும் நெல்லியடி பயிற்சி நிலையங்களை தொடர்புகொள்ளவும்.

## ASIAN COMPUTER SYSTEMS


| யாழ்ப்பாணம் | சுண்ணாகம் | நெல்லியடி |
|---|---|---|
| 2 G,ஸ்டான்லி வீதி. யாழ்ப்பாணம். Tel:021-222 5677 | பிரசன்னா கொம்ப்யூட்டர்ஸ் K.K.S.வீதி,சுண்ணாகம். | கொடிகாமம் ரோட். நெல்லியடி. |


---

## முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

அன்னை மடியில் 07 – 09 – 1931

ஆண்டவன் திருவடியில் 06 – 06 – 2003



### அமரர் கந்தர் சின்னத்தம்பி

திதி: ஸப்தமி 26-05-2004

எந்தையே!
எம்மை ஆளாக்கிய தெய்வமே!
கொடிய அரவத்தால் மாண்டீரோ?
ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஒட்டக்குழி,
மந்துவில்,
கொடிகாமம்.

(33215) (43-13-14-36)

---


அழகுக் கலைகளைப் பயின்று, அழகு பார்ப்பதற்கு
யாழ்.குடாநாட்டு மகளிருக்கு
மீண்டும் ஒரு சந்தர்ப்பம்!



பிரபல அழகுக்கலை நிபுணர்

## திருமதி பிறேமா ஜெகன்

அவர்கள் 3 நாள்களுக்கு வகுப்புகளை நடத்த வருகைதரவுள்ளார்.

இடம்: யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கேட்போர் கூடம்

**30-05-2004 (ஞாயிறு)** காலை 9.30 முதல் மாலை 4.00 வரை

1) EYE BROW THREADING
2) BLEACH - TWO TYPES
3) BASIC FACIAL - TWO TYPES
4) WAXING
5) BRIDAL DRESSING (மணப்பெண் அலங்காரம்)

முழுக்கட்டணம் ரூபா 1000/- மட்டும்

*31-05-2004 (திங்கள்) வகுப்புகள் நடைபெறமாட்டாது*

**01-06-2004 (செவ்வாய்)** காலை 9.30 முதல் மாலை 4.00வரை

*கூந்தல் அலங்காரம்*

1) HAIR PERMING
2) FASHION HAIR COLOUR
3) HAIR REBONDING STRAIGHTENING
4) GALVANIC FACIAL & HIGH FREQUENCY
   I. முகப்பருவுக்கான சிகிச்சை
   II. பொடுகுக்கான சிகிச்சை

முழுக்கட்டணம் ரூபா 1000/-மட்டும்

**02-06-2004 (புதன்)** காலை 11.00 முதல் மாலை 5.00 வரை

1) UPLIFTING முகச்சுருக்கத்தை நீக்கும் FACIAL
2) AROMA MAGIRAL
   I. SILVER FACIAL
   11. PERL FACIAL
3) AROMA THERAPY
4) GLABRA FACIAL

முழுக்கட்டணம் ரூபா 1000/- மட்டும்

*மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.*

*தொலைபேசி இல. 0777 - 439263*

தொடர்ச்சியாக 3வகுப்புகளுக்கும் சமுகமளிப்போருக்கு கட்டணத்தில் விசேட கழிவு உண்டு. (C/35203) (26-14-13)


---

## நெஞ்சகலா மூன்றாண்டு நினைவுகளில்.....



தெல்லி நகர்ப் பதியினிலே
தெய்வமாக வந்துதித்தவளே!
துர்க்கையின் வரம் வேண்டி
'துர்க்கா' என உனை நாமழைத்தோம்!
துர்க்கையின் நாளாம்
செவ்வாயினிலே தோன்றி
துயரத்தைச் சுமக்கவைத்தாய் ஒரு
செவ்வாயினிலே...
'குஞ்சு எடி குஞ்சு' என உனை நாமழைக்க
குற்றமேதுமில்லாமல் எங்கேயம்மா
சென்றிட்டாய்?

யாழ். இந்து மகளிரில் உயர்கல்வி தொடங்கி
காலனுக்கஞ்சி கடல் கடந்து திருமலை புகழ்
கல்லூரியாம் சண்முகா இந்து மகளிரில்
உயிரியல் பிரிவில் உவகையுடன் கற்றபோது
காலனவன் கொடிய பிணி வடிவில் – வந்து
பறித்திட்டானோ உன் உயிரை? – ஆனாலும்
இன்றும் உன்முகம், மழலை மென்மொழி
நினைவில் நிழலாக ஆடுதம்மா!

### செல்வி
## இலங்கைநாயகம் துஷ்யந்தி (துர்க்கா)

(உயிரியல் பிரிவு மாணவி, திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி)

திதி: ஸப்தமி (இன்று 26-05-2004 புதன்கிழமை)

மண் மகிழ 11-09-1984

மண் கதற 29-05-2001

எமது அன்புச் செல்வத்தின் மூன்றாண்டு நினைவில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!*

(சி-35196)

இராமகிருஷ்ண ம.வி.வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
T.P. 021 222 6364, 0777 14182.

(13-14-26)

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அம்மம்மா,
அண்ணாமார், அண்ணிமார்.

## கண்ணீர் அஞ்சலி

எமது வலயக் கல்விப் பணிப்பாளர்
உயர்திரு.வ.செல்வராசா அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **பத்தினி வைரமுத்து**
அவர்கள் 24-05-2004 அன்று காலமானதையிட்டு
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, கண்ணீர்
அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

நலன்புரிக் கழகம்,
தென்மராட்சி. (சி-35220)(36-11-18) வலயக்கல்வி அலுவலகம்.

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 21 ★ 02 ★ 1937



உதிர்வு 26 ★ 04 ★ 2004

### திருமதி சிவக்கொழுந்து நல்லதம்பி

பாசத்துடன் எமையணைத்து கண்ணீர் விட வைத்தீரம்மா
பண்புடனே எமையெடுத்து வளர்த்துவிட்ட உத்தமி நீர்
நீர் வளர்த்த நெஞ்சமதே நினைவிழந்து போனதம்மா!
உந்தனது உறவுகள் நாம் உணர்வின்றித் தவிக்கின்றோம்.
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

இன்று (26.05.2004) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அரசடி,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.* (32338)(36-11-18)

-அன்புப் பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## இதயம் நெகிழ்ந்த நினைவுடன் கண்ணீர் அஞ்சலி



### அமரர் வேலுப்பிள்ளை நடராசா
(சிரேஷ்ட சட்ட அறிஞர் ,நியாய துரந்தரர்,
கொழும்புத்துறை ,யாழ்ப்பாணம்)

மகாமாமுனி சிவயோக சுவாமிகள் உறைந்த சமாதி அடைந்த கொழும்புத்துறையில் உதித்தவரே கண்ணியவானே, புண்ணியவானே அல்லல்கள் உண்டா(க்)கும் நேரங்களில் ,காலங்களில் தனது உடல் நிலை குன்றியிருந்த நேரத்திலும் எங்களுக்காக ஓடோடி வந்து அல்லல்களை நீக்கும் அரு(ள்) மருந்தே. என் அன்புத் தெய்வமே!

அதி மேன்மைக்குரிய மன்றிலே எங்களுக்கு எதிரான வழக்கில் எங்களுக்காகத் தோன்றி வாதாடி விடுதலை பெற்றுத்தந்த நீதியின் குரலே, வெற்றித்திருமகனே. எம் பெருமானுடைய பரம பாதத்தை தழுவுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன் அவர் எனக்குப் புகட்டிய அறிவுரைகள், ஆலோசனைகள் என்றும் என் இதயத்தை விட்டகலா.

தன்னை அண்டிய அன்பர்களுக்கும், நண்பர்களுக்கும் கட்சிக்காரர்களுக்கும் எனக்கும் தான்கற்ற பெற்ற அயை பெரும் பேறுகளை கபடு பாராத நட்புடன் முறையாக பகிர்ந்தவர். நல்லமுறையாக எனக்கும் புகட்டிய கருணைக் களஞ்சியமே! அறிவுக்களஞ்சியமே! களஞ்சியத்தின் பெட்டகமே! அப்பெட்டகத்தின் பொக்கிசமே! அன்னாரின் பேரிழப்பு தாங்க முடியாத துன்பங்களைத்தந்து என் கண்கள் கண்ணீர் சிந்த , இதயம் நெகிழ, சித்தங்கலங்க என் கண்ணீர் அஞ்சலிகள், இதய அஞ்சலிகள், நினைவு அஞ்சலிகள் செலுத்தி அன்னாரது ஆத்மா பூரண சாந்தி அடைய எந்நாளும் அடிபரவி வணங்கும் ஆயிரம் கோடி சூரியன் பிரபுவை இறைஞ்சுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

K.N.சச்சிதானந்தன்,
இராகுல சூரியன்ஸ்,
இல. 329, பிரதான வீதி,
(சி-35217)(36-11-18) பருத்தித்துறை.

## யோகாசனக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே26

இந்துசமய விவகார அலுவல்கள திணைக்கள யாழ்.மாவட்ட அலுவலகத்தின் யோகாசன தியானப்பயிற்சி வகுப்புக் கருத்தரங்கு நாளை வியாழக கிழமை மாலை 5 மணிக்கு சிவத் தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'சமூக முரண்பாடுகளைக் களைவதற்காக யோகாசன வழிமுறைகள்' என்னும் தலைப்பில் உளமருத்துவப்பிரிவைச் சேர்ந்த எஸ்ரவீந்திரன் கருத்துரையாற்றவுள்ளார்.(ஒ-10)

## நூல் வெளியீடு

கோண்டாவில், மே26

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரத்தின் 'இணுவை முருகன் பிள்ளைத்தமிழ்' நூல் வெளியீட்டுவிழா இன்று புதன் கிழமை இணுவில் கந்தசுவாமி கோவில மண்டபத்தில் மாலை 5.00 மணியளவில் இளைப்பாறிய அதிபர் செ.சோதிப பெருமாள் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும், ஆய்வுரையை பேராசிரியர் சபா.ஜெயராசாவும் நிகழ்த்தவுள்ளனர். (10-49)


நாகம்ஸ் சுன்னாகம்



இன்று முதல் மாதவன் சதா விவேக் நடித்த
தினசரி: காட்சிகள் 11.00, 3.00, 7.00
(சி34180)(32)

நிறைஞ்சனாஸ் சங்கானை
பிரபுதேவா, ஆஷியா, தாமு, ரகுவரன் நடித்த
அலாவுதீன்
(சி34120)(12) காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

லக்சுமி இணுவில்





தினசரி :11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)
(32335)(12)

ராஜா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடாக
சூர்யா, ஈஷா, மாதவன்,
மீரா ஜஸ்மின், சித்தார்த், த்ரீஷா
மற்றும் பலர் நடித்த





காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(C/34517) (22)


## மரண அறிவித்தல்

### பொன்னர் நடராசா

கொழும்புத்துறை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னர் நடராசா அவர்கள் நேற்று (25.05.2004) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் கமலாம்பிகையின் அன்புத் தந்தையும் சண்முகநாதனின் மாமனாரும் கலாநிதி, கலாஜோதி (கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்) கலாவாணி, மோகனரூபன், தவேந்திரநாதன், வரதன் ஆகியோரின் அன்புப் பேரனும் வதனா, ரமணன், அபிராமி, லாவண்யா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2004) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.23, 4 ஆம்,
குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை. தகவல்:
செ.சண்முகநாதன்
(32341)(36-11-18) (மருமகன்).

## 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**கலாநிதி ஆ.தியாகராசா**
(எம்.ஏ.எம்.லிட் முன்னாள் கல்லூரி அதிபரும், நாடாளுமன்ற உறுப்பினரும்)



தோற்றம்
17✻04✻1916

மறைவு
25✻05✻1981

காரையன்னை ஈன்றெடுத்த எங்கள் கோவே
காலமெல்லாம் கலை ஞானம் உணர்த்துவாயே!
சீரையெல்லாம் மானியற்கு ஆற்றுவாயே!
சிறப்புடனே செம்மை வழி காட்டுவாயே!
பேரையெல்லாம் நிலைநாட்ட எங்கள் நம்பி!
பிழையின்றி நாளெல்லாம் தொண்டு செய்தாய்!
ஊரையெல்லாம் பல வழியில் உயர்றுதற்காய்
ஓய்வின்றி உழைத்த நின்றன் புகழ் வாழிவாழி.

அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள்,
பழைய மாணவர்
அபிவிருத்திச் சங்கம்.

*யா/கலாநிதி ஆ.தியாகராசா*
*ம.ம.வித்தியாலயம்,*
*காரைநகர்.* (32339)(36.11.18)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்வலி

மண்ணில் 23 08 1918



விண்ணில் 01 06 1998

### சுப்பிரமணியம் சபாரத்தினம்
(ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற முதலியார்)
திதி- ஸப்தமி (26-05-2004)

ஆண்டுகள் ஆறு கடந்தாலும்
உங்கள் நினைவுடன் வாழும்

*8ஆம் கட்டை,*
*மல்லாகம்.* (32332)36-11-18)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு விசுவநாதன்
(தம்பசிட்டி)

பருத்தித்துறை, தம்பசிட்டி, கதிரைவேற்பிள்ளை வீதியைச் சேர்ந்த முருகேசு விசுவநாதன் அவர்கள் நேற்று (25.05.2004) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் சீதாலட்சுமியின் அன்புக் கணவரும் சிவகுமார் , சிவகுமாரி, சந்திரகுமார், சிவந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கோமதி, குபேரராஜன், இராசகுமாரி ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2004) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சுப்பர்மடம் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கதிரைவேற்பிள்ளை வீதி,
தம்பசிட்டி,
பருத்தித்துறை. (சி-35221)(36-11-18)
தகவல்:
வி.சிவகுமார்(மகன்).

### பேராசிரியர் டாக்டர் சி.சோமசுந்தரம்
(சங்கானைச் சோமு)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட தமிழ்நாட்டு பிரபல நூலாசிரியரும் உலகத் தமிழ் பண்பாட்டுக்கழகத் தலைவருமான பேராசிரியர் டாக்டர் சோமசுந்தரம் (சங்கானைச் சோமு) அவர்கள் 20.05.2004 வியாழக்கிழமை கனடாவில காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சட்டத்தரணி சிவஞானம் - திருமதி தேவி சிவஞானம் தம்பதியரின் அன்பு மகனும் சுசிலாவின் அன்புக் கணவரும் ஞானதேவி சிவஞானசேகரம் (U.K). குலநாயகம் (GERMANY), கெங்காதேவி சுப்பிரமணியம் (U.K), நிர்மலதாசன் (U.K), சிவகுமார் (U.K), ரவீந்திரன் (U.K), Dr.மகேசன் (CANADA), சிறீராம் (CANADA), கணேசன் (U.S.A), கமலாதேவி சிவானந்தன் (U.K), ஸ்ரீ ஜெயதேவி நந்தகுமார் (U.K) ஆகியோரின் பாசமிகு சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.05.2004) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்களுக்கு:*
*கனடா.T.P.0014164312401*
*(U.K). T.P.004420890680037* (32333)(11-18-36)

தகவல்:
சுசிலா (மனைவி)
தாய், சகோதரர்கள்,

# தம்பையாவின் படுகொலை கல்விச்சமூகத்துக்குப் பேரிழப்பு

## யாழ்.பல்கலை ஆசிரியர்சங்கம் அனுதாபம்

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறைத்தலைவர் குமாரவேல் தம்பையாவின் படுகொலை தமிழ் பேசும் கல்விச் சமூகத்துக்குப் பேரிழப்பாகும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கபபட்டுள்ளதாவது:-

குமாரவேல் தம்பையாவின் படுகொலை எமக்குப் பேரதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்துயுள்ளது. இத்தகைய காட்டுமிராண்டிதனமான செயல் அனைத்து தரப்பினராலும் கண்டிக்கத்தக்கதும் வெறுக்கத்தக்கதுமாகும். தம்பையாவின் படுகொலை தமிழ்பேசும் கல்விச் சமூகத்துக்குப் பேரிழப்பாகும் இது போன்ற நிகழ்வுகள இனிமேலும் தொடர்ந்து நடைபெறாது தடுக்கப்படுவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். அரச, இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இச்சம்பவம் இடம்பெற்றதால் அங்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டும் பொறுப்பு அவர்களுடையதே - என்றுள்ளது. (ஒ-3)


## தென்னிந்தியாவில் இருந்து

நான்காவது முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்



### ராஜகுருசாமி

அவர்கள்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 2004ஆம் ஆண்டு புதுப் பலன்களை அறிவதற்கு மீண்டும் யாழ். மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க வருகை தந்துள்ளார்.

பார்க்கும் நேரம்: காலை 9.00 - 6.00 மணி
கைரேகை மட்டும் 9.00 - 1.00 மணிவரை

★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம் ★ பெயர்ராசி ★ திருமணப் பொருத்தம்
இவற்றில் பல வருட அனுபவம் பெற்றவர்.
(சி-35211)

ராஜகுருசாமி மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ் T.P.: 5867
60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA.

ரீ.வி, டெக், வீடியோ ஓடியோ கசற், கசற் றேடியோ, றேடியோக்கள், சங்கீத ஓகன்கள்

## சிறிமாதவன்

சகல விதமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், பிலிம்றோல் மற்றும் அன்பளிப்புப் பொருள்கள்

அனைத்துப் பொருள்களையும் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்

97,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-35191)(32) 021 2226365


## மரண அறிவித்தல்கள்

### தாமுப்பிள்ளை தேவராசா

**(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)**

துன்னாலை வடக்கு, கரவெட்டியைச் சேர்ந்த தாமுப்பிள்ளை தேவராசா நேற்று (25.05.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி புதுநாயகத்தின் அன்புக் கணவரும் திருமதி கௌரி சேதுராஜா (ஆசிரியர், யா/மெதடிஸ்தமிசன் பெண்கள் கல்லூரி பருத்தித்துறை), திருமதி வசந்தி சிவசேகரம் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் செ.சேதுராஜா (அதிபர் நெல்லியடி ம.ம.வி), ச.சிவசேகரம் (இயக்குநர் - ரூபின்ஸ் நிறுவனம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வருண்பிரசாந் (யாழ்.மருத்துவபீடம்), மாழதிகா, மெச்சி பாரதா (மாணவிகள், மெதடிஸ் மிசன் பெ.கல்லூரி - பருத்தித்துறை), ரூபின் பிரகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.05.2004) புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் மாலை 4.00 மணிக்கு ஓடைக்காடு மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துன்னாலை வடக்கு,*
*துன்னாலை.*

தகவல்:
செ.சேதுராஜா (மருமகன்)

### திருமதி ஆறுமுகம் கனகம்மா

**(இளைப்பாறிய ஆசிரியர் - மீசாலை கமலாம்பிகை வித்தியாசாலை)**

சாவகச்சேரி, தாமோதரம்பிள்ளை வீதியைச் சேர்ந்த திருமதி ஆறுமுகம் கனகம்மா நேற்று (25.05.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சமாதான நீதிவான் அருணாசலம் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் பிரபல ஆயுர்வேத வைத்தியர் காலஞ்சென்ற பரமு வீரசிங்கத்தின் அன்பு மகளும் ஜெயபாலன் (சமாதான நீதிவான், வீதி அபிவிருத்தி அதிகார சபை - வீதி அபிவிருத்தித் திணைக்களம், ஒப்பந்தக்காரரும் - கெயாஸ் கல்லுடைக்கும் ஆலை, கப்பூது கரவெட்டி உரிமையாளர்), ஜெயக்குமாரன் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாலுசந்தி, கரவெட்டி), ஜெயராணி, ஜெயதேவன் (ஜேர்மனி), ஜெயமணி (கனடா), ஜெயலட்சுமி (ஜேர்மனி), ஜெயகாந்தன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*திருவேரகம்,*
*சரசாலை வடக்கு, சாவகச்சேரி.* (32343)(11-17-32)

தகவல்:
ஆ.ஜெயபாலன் (மகன்).

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்று நிர்வாகத்துக்கு கடிதம் மூலம் தெரிவித்துவிட்டு விடுதிகளில் இருந்து வெளியேறியுள்ளனர். இவர்கள் பீடாதிபதியிடம் அனுமதிபெறாமல் வெளியேறியமை தொடர்பாக இவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு கல்வியியற் கல்லூரியின் ஆணையாளர் கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஆராய வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் கல்வியியற் கல்லூரிக்கு சென்றார். பின்னர் வவுனியா பொதுமருத்துவமனையில் தங்கியிருந்த நான்கு மாணவர்களையும் சென்று பார்வையிட்டார். அந்த மாணவர்களுகக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்குமாறும் சம்பந்தப்பட்டவர்களுக்கு பணிப்புரை வழங்கியதாக அவர் தெரிவித்தார்.


**PERSONAL CLASS**

வணிகக் கல்வியும் கணக்கீடும்

பிரிவு-2 ஆரம்பம்
O/L -2004 - தொங்கல் கணக்கு
Grode 10 - முதன்மை ஏடுகளும் பேரேடுகளும்
A/L 2006 - வியாபார இலாப நட்டக் கணக்கும் ஐந்தொகையும்
ஆரம்பம்: 28-05-2004
வெள்ளி காலை 6.30 a.m.
ஆசிரியர்: S.K. அற்புதராஜா (B.Com.Dip in Edu.)
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
T.P. No: 077 6048 872
(32340)

**NEW SCIENCE CENTRE**
மணிக்கூட்டு வீதி யாழ்.நகர்

**A/L DAY CLASS**

கணித, விஞ்ஞானப் பிரிவு
ஆரம்பம்: 31-05-2004
திங்கள் 9 a.m

CHE.- அன்பழகன்
PHY. ஜெயசீலன், பிரபா
C.Maths-ஜெயந்தன்
Bio. தற்பரன், பொன் திவாகரன்
(32319)(32)

**CHEMISTRY**

அடிப்படையிலிருந்தான துரித மீட்டல்
Past Paper
Model Paper
DIAS BSc (Hons) (Spl.in Chem.
104/4, CROSS RD, ATHIYADY
(32540)

**காணி விற்பனைக்கு**

கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் (அரசடி வீதி) நல்ல சுற்றாடலில் 13 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 0777 573875
(32318)

**A/L 2006 LOGIC**
இறுதிச் சந்தர்ப்பம்
பிரிவுII
செவ்வாய், வியாழன் - 5p.m.
ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
BY:P.கமல்
BRIGHTMAN -நாவலர் வீதி
(32299) (17)

**SUBRA (14)**
சித்தன்கேணி
ஆங்கிலம் கற்க அனுமதிபெற்றுவிட்டீர்களா? அனுமதிக்கு முந்துங்கள
SPOKEN ENGLISH and GRAMMAR
By: BRITTO
ஆரம்பம்: 26.05.2004
புதன் காலை. 7.00 மணி
(C/35020)


## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாத போக்கில் திரிபுபடுத்திய செய்திகளை வெளியிடுகின்றன. ஏனைய ஆங்கிலப் பத்திரிகைகளோ நடுநிலையுடன் செயற்படுகின்றன. இந்தப் பக்கச்சார்பான நிலையை தமிழ் ஊடகங்கள் பின்பற்றுவதன் காரணம் என்ன? எனக்கு தெரியவில்லை. உள்ளதை உள்ளபடி எழுத வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

இந்தியா என்ற நாடு திறந்த மனதுடன் அதன் வெளியுறவுக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்கிறது. தொடர்ந்தும் இலங்கைக்கு ஒரு நல்ல நண்பனாக உதவி செய்ய அது காததிருக்கின்றது. இதன் அடிப்படையிலேயே வடக்கு - கிழக்கில் அரச கட்டுப்பாடற்ற பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க அது தீர்மானித்துள்ளது.

வடக்கு - கிழக்கு மக்களுக்கு - குறிப்பாக அரச கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேச மக்களுக்கு - உதவக்கூடாது என்ற கபட எண்ணம் ஏதும் எமக்கில்லை. புனர்வாழ்வுப் பணியில் இலங்கை மக்களுக்கு உதவ வேண்டும் என்ற எமது திட்டத்தின் கீழ் அந்தப் பகுதி மக்களும் நன்மை பெற வழிசெய்வோம் - என்றார் தூதுவர் சென். (க)

## வீடமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவை வழங்க முன்வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒரு வீட்டை அமைக்க ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா வழங்க முடிவு செய்யப்பட்டிருந்தது. வீடொன்றுக்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா வீதம் வழங்கும்படி விடுதலைப் புலிகள் கோரியிருந்தனர். இந்நிலையினிலேயே இந்தத்திட்டத்தை இறுதியாக்குவது தொடர்பான உயர்மட்டமாநாடு திருகோணமலையில் நடந்தது.

## எதிர்வரும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படவுள்ளன. அச்செயற்பாடுகள் முடிவுற்றதும் ஜூலை மாதத்தில் அவை திறை சேரியின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளன. இந்தத் தகவல்களை பிரதி நிதியமைச்சர் ரஞ்சித்சியம் பலாப்பிட்டிய தெரிவித்தார். முதல் தொகுதி வேலைவாய்ப்புக்கள் ஓகஸ்ட் முதலாம் திகதியளவில் வழங்கப்படக் கூடுமென அவர் கூறினார். விண்ணப்பித்துள்ள வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை பற்றி தற்போது அரச அதிபர் பணிமனைகள் மட்டத்தில் கணிப்பீடு மேற கொள்ளப்பட்டு வருவதாகவும் - அதற கமைய சுமார் 27 ஆயிரம் வேலைவாய்ப்புக் களை வழங்கும் வகையில் அரச நிறுவனங்களில் நிலவும் பதவி வெற்றிடங்கள் கண்டறியப் பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-ரி)

## யாழ்.செயலகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் அடங்கிய அட்டைகளையும் தாங்கி இருந்தனர். பொலீஸாரும் பாதுகாப்புப் படையினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

எனினும், யாழ்.செயலகத்துக்குச் செல்லும் தனது நிகழ்ச்சித்திட்டத்தை அவர் தவிர்த்துக்கொண்டார். அதனால் அங்கு பத்திரிகையாளர்களுடன் அவர் நடத்தவிருந்த சந்திப்புரத்தானது. யாழ்.செயலகத்தில் பணிபுரியும் தகவல் திணைக்கள ஊழியரான பெண்மணியை யாழ்.நகரில் தாம் நிகழ்ச் சியில் பங்கு கொண்ட அலுவலகம் ஒன்றில் வைத்து அவர் சந்தித்து உரையாடினார்.

யாழ்.நகரிலுள்ள பள்ளிவாசல்களுக்கும் அவர் விஜயம் செய்தார். நேற்று மாலையே பலாலியிலிருந்து அவர் கொழும்புக்குப் புறப்பட்டார். (ஒ-3-31)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் பரமானந்தம்

அச்சுவேலி தெற்கு, பயிற்றோலையைச் சேர்ந்த நாகலிங்கம் பரமானந்தம் 24.05.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பயிற்றோலையைச் சேர்ந்த நாகலிங்கம் -சிவக்கொழுந்து தம்பதிகளின் மகனும் வசந்தமலரின் பாசமிகு கணவரும் கிருஸ்ணானந்தன் (அவுஸ்திரேலியா), குந்தகை (லண்டன்), கயல்விழி, பூங்குழலி, பானுசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (26-05-2004) புதன்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

*பயிற்றோலை,*
*அச்சுவேலி* (சி-35228)(11-17-32)

தகவல்:
ப.பானுசாந்தன் (மகன்).

### திருமதி இராசா வள்ளிப்பிள்ளை

வல்லிபுரக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசா வள்ளிப்பிள்ளை நேற்று 25.05.2004 இறைபதமடைந்தார்.

அன்னார் சத்தியமூர்த்தி, காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் (யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்ப அலுவலர்), சிவனேஸ்வரி (உபதபால் அலுவலர் - திக்கம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமநாதன் (கனடா), அன்னபூரணம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 26.05.2004 பிற்பகல 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கவிதா ஸ்ரோர்*
*பருத்தித்துறை.* (சி-35227)(11-18-32)

தகவல்:
சி.சத்தியமூர்த்தி.
மகள், மருமக்கள்.

### திருமதி பொன்னையா நாகரத்தினம்



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பொன்னையா நாகரத்தினம் அவர்கள் நேற்று (25.05.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (முன்னாள் ஸ்ரீவரதாஸ உரிமையாளர்), இராசேஸ்வரி, காலஞ்சென்ற கனகலிங்கம் (நில அளவையாளர்), கனகலிங்கம், வள்ளிநாயகி, பத்மநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (27.05.2004) வியாழக்கிழமை நடைபெறும்.

*"தாயகம்"*
*இளந்தாரி கோவிலடி,*
*இணுவில் கிழக்கு, இணுவில்* (32344)(37-11-18-32)

தகவல்:
குடும்பத்தினர்.

### அமரசிங்கம் சத்தியசீலன்



ஏழாலை மேற்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட அமரசிங்கம் சத்தியசீலன் 15.05.2004 சனிக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அமரசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்) - பாலேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வனும் சத்தியரூபன் (உப தபாலதிபர், ஏழாலை தெற்கு) அவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரது நல்லடக்கம் 28-05-2004 வெள்ளிக்கிழமை சுவிஸில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை* (32302)(11-18-32)

தகவல்:
அ.சத்தியரூபன் (தம்பி)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.05.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.